பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒரு நூலகம்.

Registered as a Newspaper

15 NOV 1997

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 13 வியாழக்கிழமை (30-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 316

# ராகிங்குக்கு எதிராகக் கொழும்பில்

# பல்கலை. மாணவர் ஆர்ப்பாட்டம்!

## கடும் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 30

**பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் 'ராகிங்' சம்பவங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.**

கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக தும்முல்ல சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுலோக அட்டைகளைத் தாங்கியபடி, ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் சுமித அத்துளசிறி கருத்து வெளியிடுகையில், பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷின் மரணம் சகல கல்வி நிறுவனங்களுக்கும் படிப்பினையாக இருக்க வேண்டும். ராகிங் என்னும் நாசகார நடவடிக்கையை நிறுத்த கல்வி நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்த மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

(13ஆம் பக்கம் பார்க்க)

அன்பர்கள் அனைவர்க்கும்
உதயனின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## 80 பிச்சைக்காரர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஒக். 30

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித் தெரு, மருதானை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு 80 பிச்சைக்காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் விபசாரிகள், தெருச் சிறுவர்களும் அடங்குவர்.

பிச்சைக்காரர்கள் வேடத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் 7 கடைகள் தீக்கிரை!

கொழும்பு, ஒக். 30

கொழும்பு கோட்டை உலக சந்தையில் நேற்றுக் காலை இடம்பெற்ற தீ விபத்தில் 7 கடைகள் தீக்கிரையாகின.

மின் ஒழுக்கு காரணமா

(13ஆம் பக்கம் பார்க்க)

## லயன் எயர் விமானம் திருப்பிச் சென்றது!

### பலாலியில் காலநிலை சீர்கேடு!

யாழ்ப்பாணம், ஒக். 30

இரத்மலானையில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்குப் பலாலி நோக்கிப் புறப்பட்ட ''லயன் எயர்'' நிறுவன பயணிகள் விமானம் பலாலியில் நிலவிய சீரில்லாத காலநிலை காரணமாக 4 மணி நேரத்தின் பின்னர் மீண்டும் இரத்மலானையில் இறங்கியது.

பயணிகள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்களின் உடைமைகள் இரத்மலானை விமான நிலையத்தில் உள்ள தமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் —

இன்று காலை 9 மணிக்கு அவர்களை பலாலிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்— ''லயன் எயர்'' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மரண விசாரணைத் தீர்ப்பு நாளை

கொழும்பு, ஒக். 30

வரப்பிரகாஷின் மரண விசாரணை தொடர்பான தீர்ப்பு நாளை வழங்கப்படும் என கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி எம். எம். ஜி. பெரேரா அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மரண விசாரணை நடைபெற்ற சமயம் தீர்ப்பு 04. 11. 1997 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

விசாரணைகளைத் துரிதமாக நடத்த இருப்பதால் தீர்ப்பு உடனடியாக தேவை என பேராதனைப் பொலீஸார் விண்ணப்பம் செய்ததையடுத்தே தீர்ப்பு வழங்கும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டது.

இச்சம்பவம் குறித்து கண்டியில் இரு பிரிவுகளாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்களான ஏழு பேரில் இருவர் காலஞ்சென்றவருடன் ஒரே அறையில் வசித்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

'ராகிங்' காலம் முடிவடைந்து 3 வாரங்கள் கடந்த பின்புதான் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில் பல்வேறு ஊகங்களின் அடிப்படையில் புலனாய்வுகள் மேற்கொள்

(13ஆம் பக்கம் பார்க்க)

### கடல் அட்டை பிடிக்கும்போது

## புங்குடுதீவுக்கடலில் கைதான 10 மீனவர்களும் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 30

கடந்த ஜூலை 22 ஆம் திகதி புங்குடுதீவுக் கடலில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்டுப் பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த 10 மீனவர்களும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் கடல் அட்டை பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற போது கைது செய்யப்பட்டிருந்தனர்.

23 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களது வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது இவர்களை நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் விடுதலை செய்தார்.

(இ-9)

## கைதான மாணவர் மீது கொலைக் குற்றச்சாட்டு?

கொழும்பு, ஒக். 30

வரப்பிரகாஷ் கொலைக்கு காரணமானவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மாணவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படும் என்று கண்டி பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—

மேற்படி சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் மாணவனை தேடிப்பிடிக்க 2 விசேட பொலீஸ் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும்—பொலீஸ் சுப்பிரிண்டன் நிமால் மடிவாகே தெரிவித்தார்.

இதற்கிடையில் பேராதனைப் பல்கலைக்கழகம் 'வரப்பிரகாஷ் வாரம்' அனுஷ்டிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த வாரத்தில் கருத்தரங்

(13ஆம் பக்கம் பார்க்க)

## 11 படையினர் காயம்

வவுனியா, ஒக். 30

பெரியகுளம் கிழக்கு பிரதேச இராணுவ நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 11 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம் பெற்றது.

### கல்முனையில்

## ஆசிரியர் போராட்டத்தால் பாடசாலைகள் ஸ்தம்பிதம்

அம்பாறை, ஓக். 30

கல்முனை கல்வி வலய தமிழ்—முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்கள் நேற்று ' சுகவீன லீவு ' போராட்டத்தில் குதித்தனர். இதனால் பாடசாலைகள் முற்றாகச் செயல் இழந்தன.

1995 — 1996 ஆம் ஆண்டுக்கான பயங்கரவாதப் பிரதேச ஊக்குவிப்பு அலவன்ஸை வழங்குமாறு கோரியே இவர்களின் போராட்டம் நடைபெறுகிறது.

இப்போராட்டம் காரணமாக கல்முனை கல்வி வலயத்

(13ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ராணுவப் பயிற்சி அணி இலங்கையிலிருந்து திடீர் வாபஸ்!

கொழும்பு, ஒக். 30.

அமெரிக்காவின் கிறீன் பெரெட்ஸ் (Green Berets) என்ற இராணுவப் பயிற்சி அணி இலங்கையில் இருந்து திடீரென வாபஸ் பெற்றுச் சென்றுள்ளது.

அமெரிக்காவின் இராணுவத் தீர்மானங்களை எடுக்கின்ற பென்ரகன் அதிகாரி ஒருவர் இத்தகவலை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு நிலை குறித்து மிக உன்னிப்பாக அவதானித்த பின்னரே இந்தப் படைப்பிரிவு திரும்பி வருவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொமாண்டோக்களுக்கு நடமாடும் பயிற்சி அளித்து வந்த 'கிறீன் பெரெட்ஸ்' அமைப்பு இலங்கை இராணுவத்தின் 53 ஆவது படைப் பிரிவை சக்தி மிகுந்த தாக்குதல் பிரிவாக இயங்க வைப்பதில் பெரும் பங்காற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — குண்டு வெடிப்பால் சேதமடைந்த கலதாரி ஹோட்டலை நேற்று முன்தினம் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் பார்வையிட்டார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபத்திரு நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு

எமது தீபாவளி வெளியீடுகளான...

ஹரீஸ், சௌந்தர்யா நடித்த

★ ஜெய்பாரத்

Dr. ராஜசேகர் நடித்த

★ சவால்காரன்

சுப்பஸோவின்

★ காட்சியும் கானமும் Vol - 01

ஓடியோ CD வெளியீடுகளாவன

A. R. ரகுமானின்

★ வந்தேமாதரம்

★ மேடின் - இந்தியா (ஹிந்தி)

★ ரட்சகன்

★ சூலமங்கலம் சகோதரிகளின் ஸ்கந்த ஷஷ்டி கவசம், ஸ்கந்த குரு கவசம்.

சுப்பஸோ - வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/1926)

## நன்றி நவிலல்

எமது பழைய மாணவர் சங்கத்தினரால் 29-10-97 அன்று கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட

அமரர்

செல்வவிநாயகப்பிரகாசம் வரப்பிரகாஷ்

அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய பெருமக்கள், அழைப்புகளை ஏற்று நிகழ்ச்சியில கலந்து கொண்ட அனைத்துக் கல்லூரி மாணவ தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

பழைய மாணவர் சங்கம்,
யாழ். பரி. யோவான் கல்லூரி.

(சி/1922)

## இந்து அன்னை கண்ணீர் வடிக்கிறாள்

வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை

(நுண்ணுயிரியல் நிபுணர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக் கழகம்)

இந்துவின் பழைய மாணவரும் எமது சங்கத்தின் கொழும்புக் கிளை உறுப்பினரும் புகழ் பெற்ற மருத்துவ நிபுணருமான

வைத்திய கலாநிதி
க. வேலாயுதபிள்ளை அவர்களின்

மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்கிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி.

(சி/1925)

## உள்ளக சிகிச்சைப் பிரிவு இயங்கும்

நல்லூர், ஒக். 30

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் உள்ளக சிகிச்சைப்பிரிவு இயங்க உள்ளது.

இதற்கு முன்னோடியாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, கோப்பாய் லயன்ஸ் கழகம் உட்பட பொதுத் தாபனங்கள் அங்கு சிரமதானப் பணிகளை மேற்கொண்டன. (இ-103:

## சிற்றூழியர் நேர்முகப் பரீட்சை

யாழ். கல்வி வலயம் இரண்டின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் பணிபுரியும் தற்காலிக, அமைய சிற்றூழியர்களை நிரந்தர சேவைக்கு அமர்த்தும் நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 4ம், 5ம் திகதிகளில் இருபாலைச் சந்தியிலுள்ள கல்விப்பணிமனையில் நடைபெறவுள்ளதாக வலயம்—2 கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார். [ஐ-109]

## பாலர் கல்வி நூல்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் பாலர் கல்வி தொடர்பான நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

கலாநிதி சபா. ஜெயராசாவினால் எழுதப்பட்ட 'பாலர் கல்வி' என்னும் இந் நூல் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய பாலர் கல்வி தொடர்பான விடயங்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. (ஐ-ரீ)

## பூவரசு மரங்கள் வெட்டி அழிப்பு

வடமராட்சி கிழக்கு, குடத்தனை, அம்பன், நாகர்கோயில் கிராமங்களில் காணிகளிலுள்ள பூவரசு மரங்கள் விறகு வியாபாரிகளினால் தறித்து அழிக்கப்படுகின்றன.

விறகு வியாபாரிகளின் இந்த நடவடிக்கையினால் பச்சை மரங்கள் அழிக்கப்படுவதுடன், காணியின் எல்லைகளும் அழிந்து போகின்றது என அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-ரீ)

BOSCO INSTITUTE

25, றக்கா றோட்

A/L 99

கேள்விக் கோட்பாடு

திரு. இளங்கோ B. A.

ஆரம்பம்: 1 - 11 - 97 10-11 A.M.

(50877)

தீபாவளி வாழ்த்துக்கள்!

காவேரி பட்டுச் சோலை
ரம்மியாஸ் பட்டுச் சோலை

புடவை ஸ்தாபனத்தாரும், ஊழியர்களும்

ஆதரவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றார்கள்,

ஆடவர், வனிதையர், மழலைகளுக்கு அழகுக்கு மெருகூட்டும் இன்றைய உலகின் புதிய எண்ணற்ற ரகமான, தரமான பலவர்ணப் பட்டாடைகளையும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு ஆடைத் தினுசுகளையும் ஒரே இடத்தில் நீங்கள் தெரிவுசெய்திட என்றென்றும் நாடவேண்டிய இடம்:-

காவேரி
48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

ரம்மியாஸ்
221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(50875)

புலமைப் பரிசில் வகுப்பு 1998

ஆண்டு 4 கற்கும் மாணவர்களுக்கான

2ஆவது புதிய பிரிவு ஆரம்பம்

01-11-1997

சனி மாலை 3-00 மணி

★ 35 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

3ஆவது பரீட்சை 02-11-97

ஞாயிறு காலை 9-00 மணி

★ புதிய நாவலர் கல்வி நிலையம் ★

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(50874)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சோமாஸ்கந்தர்

(முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சோமாஸ்கந்தர் அவர்கள் நேற்று 29-10-97 அதிகாலையில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, இரத்தினசபாபதி, திருமதி அருணாசலம், திருமதி சிற்றம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ச. இளையதம்பி (ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி) அவர்களின் மருமகனும், திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம், திருமதிபராசக்தி நவரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), சந்திரமௌலீசன், காலஞ்சென்ற யோகேஸ்வரன் (ஆசிரியர்) மற்றும் கங்கா மௌலீசன், திருமதி நகுலேஸ்வரி சிறீதரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-10-97 கொக்குவில் இந்து மயானத்தில் மாலை 3 மணியளவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி சோமாஸ்கந்தர் (மனைவி)
பிறவுண் றோட்,
கொக்குவில். (50876)

## நாகரெத்தினம் செல்வரெத்தினம்

(ஓய்வு பெற்ற வட மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரெத்தினம் செல்வரெத்தினம் 29-10-97 இல் காலமானார்.

இவர் திருமதி செ. தங்கம்மாவின் அன்புக் கணவரும், செ. சுதாகரன், செ. பத்தகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி தங்கம்மா செல்வரத்தினம்
40/3, புகையிரத வீதி கிழக்கு ஒழுங்கை,
அரசடி வீதி,
கந்தர்மடம். [50871]

## சின்னர் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற சிறாப்பர், இலங்கை வங்கி)

அத்தியடியைச் சேர்ந்த சின்னர் சின்னத்துரை 29-10-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தங்கம்மா, கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ஆறுமுகம், செல்வநாதன் (சிமெந்து கூட்டுத்தாபனம், கொழும்பு), இந்திரகுமாரன் ஆகியோரின் ஆசை அப்பாவும், திருமதி உருத்திரா (முன்னாள் ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), திருமதி சோமநாதன் (முன்னாள் ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), தனபாலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், Dr. பார்த்தீபன் (யாழ். போதனா வைத்தியசாலை), வாசவன், வாணி, அனோஜன், றேணுஜா, அபர்ணா (கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், லண்டன்), ஷியாமா, திவ்வியா, சுவேதா (லண்டன்), மயூரேஷன் ஆகியோரின் ஆசைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-10-97 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
திருமதி உருத்திரா (மருமகள்)
23, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(50868)

மேலும் மரண அறிவித்தல்கள் 9 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# ஐ. நா. - ஈராக் இடையே மீண்டும் முறுகல் நிலை!

லண்டன், ஒக். 30

ஈராக் ஆயுத மேற்பார்வையாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கா விடில் மேலும் புதிய தடைகள் விதிக்கப்படும் என ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியதைத் தொடர்ந்து ஆயுத மேற்பார்வையாளர்களுடன் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும் என ஈராக்கின் தேசிய சட்டமன்றம் பரிந்துரைசெய்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஈராக் குவைத் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து ஐ. நா. ஈராக் மீது சர்வதேச தடை விதித்தது.

ஐ. நா. வின்தீர்மானங்கள் அனைத்தையும் ஈராக்செயற்படுத்தி அதன் பேரழிவு ஆயுதத்திட்டத்தை அழித்தால்தான் இந்தத்தடைகள் நீக்கப்படும் என்றும் ஐ. நா. எச்சரித்தது.

ஈராக்கிய சட்ட மன்றம் பரிந்துரை வழங்கியதைப் போன்று புரட்சிகர தலைமைக் கவுன்ஸிலும் நடந்து கொண்டால்—ஐ. நா. ஆயுதப் பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தால் —ஐ. நா. சபையோடும் அமெரிக்காவோடும் மற்றுமொரு நெருக்கடி நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் அவ்வாறு செய்தால் மிக மோசமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ. நா. சபையும் அமெரிக்காவும் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பது ஊகிக்கமுடியாத ஒன்று என அவதானிகள் தெரிவித்தனர்.

ஈராக் மீது மேலும் பல ஏற்றுமதித் தடைகள் அறிவிக்கப்படலாம். ஈராக் மீது முழுமையான போக்குவரத்துத் தடைகள் விதிக்கப்படலாம். ஈராக்கின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மறைமுகமாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## பிலிப்பீன்ஸில் சிறுவருக்கென தனியான நீதிமன்றம்

மணிலா, ஒக். 30

பிலிப்பீன்ஸில் சிறுவர்களுக்கான விசேட நீதிமன்றம் ஒன்று கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள், சிறுவர்களுக்கு எதிராகக் குற்றம் புரிவோரும், குற்றச்செயல்கள் புரிகின்ற சிறார்களும் இந்தச் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்கள். குழந்தைகள், சிறுவர்களுக்கு எதிராகக் குற்றமிழைப்போர் விடயத்தில் இந்த நீதிமன்றம் கடுமையாக நடந்து கொள்ளும். ஆனால் குற்றச்செயல் புரிகின்ற சிறார்களை குற்றவாளிகளாக நோக்காமல் ஒரு சமுதாயச் சூழலினால் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டவர்கள் என்ற கரிசனையோடு அணுகும் என சிறப்பு நீதிமன்றை தொடங்கி வைத்து உரையாற்றுகையில் அதிபர் பிடல் ராமோஸ் குறிப்பிட்டார்.

[ஐ-9]

## சம்பியாவில் புரட்சி முறியடிப்பு; படை அதிகாரிகள் பலர் கைது

லுசாக்கா, ஒக். 30

தென் ஆபிரிக்க நாடான சம்பியாவில் நேற்று முன்தினம் நடந்த திடீர் இராணுவப் புரட்சியை அரசாங்கப் படைகள் முறியடித்துவிட்டன.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடந்தையாக இருந்த பலர் தேடப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

அதிபர் பிரெட்றிக் சிலுபாவின் அரசு கவிழ்க்கப்பட்டதாக நேற்று முன்தினம் செய்தி வெளியானது தெரிந்ததே.

அதிபருக்கு விசுவாசமான படையினர் சதிப்புரட்சியை அடுத்த சில மணி நேரத்துக்குள்ளேயே முறியடித்துவிட்டனர். (ஐ-9)

## 150 கைதிகள் தப்பினர்

லண்டன், ஒக். 30

ஹெண்டூரஸ் நாட்டில் கடந்த ஞாயிறன்று சிலை ஒன்றை உடைத்துக்கொண்டு 150-க்கு மேற்பட்ட கைதிகள் தப்பி விட்டனர்.

தப்பியோடிய கைதிகளைத் தேடிப்பிடிப்பதற்காக பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றை ஹெண்டூரஸ் அரசபடைகள் ஆரம்பித்துள்ளன. (ஐ)

## ஆணின் வயிற்றில் 4 மாதச் சிசு!

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் கான்பூரில் ஆண் ஒருவரின் வயிற்றில் இருந்து நான்கு மாத சிசு ஒன்று சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டிருக்கிறது.

தனியார் மருத்துவமனை ஒன்றில் அறுவைச் சிகிச்சை மூலம் டாக்டர்கள் இச் சிசுவை வெளியே எடுத்தனர்.

ஆண்களின் வயிற்றில் ''ரெறாரோமா'' எனப்படும் கட்டிகள் உருவாகுவது உண்டு. அவற்றின் மூலமே இந்த சிசு உருவாகியிருக்கக் கூடும் என்று டாக்டர்கள் நம்புகின்றனர்.

இந்தச் செய்தி கான்பூர் நகர மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சிசுவைப் பார்ப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் அந்த மருத்துவமனைக்குச் சென்றுள்ளனர்.

## சல்மான் ருஷ்டியின் நூல் திரைப்படமாகிறது

இந்த நூற்றாண்டின் சர்ச்சைக்குரிய எழுத்தாளர்களில் ஒருவர் சல்மான் ருஷ்டி. அவர் எழுதிய ''நள்ளிரவின் குழந்தைகள்'' என்ற நூலின் ஒரு பகுதி திரைப்படமாக்கப்படவுள்ளது.

இந்திய— பாகிஸ்தான் பிரிவினையின் போது நடந்த வன்முறைகளைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட இந் நூலின் ஒரு பகுதியை ''சலீமின் கதை'' என்ற பெயரில் பி. பி.ஸி. தொலைக்காட்சி நிறுவனம் திரைப்படமாக்கவுள்ளது.

படப்பிடிப்பினை இந்தியாவில் நடத்த பி. பி. ஸி. நிறுவனம் அனுமகிகோரிய போதும் சர்ச்சைக்குரிய நூல்என்ற காரணத்தால் இந்தியா அதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கபபடுகிறது. அதனால் படப்பிடிப்பை இலங்கையில் நடத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அமெரிக்க அதிபருடன் ஜியாங் செமின் சந்திப்பு

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன அதிபர் ஜியாங் செமின் செவ்வாய்க்கிழமை இரவு வெள்ளை மாளிகையில் அதிபர் பில்கிளின்ரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இச் சந்திப்பு சாதாரண முறையில் நடைபெற்றது.

அதிபர் கிளின்ரனுக்கும், சீன அதிபருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் நேற்று நடைபெறுவதாக இருந்தன.

73 வயதான சீன அதிபர் செமின் முன்னதாக ஹவாய் தீவில் தங்கியிருந்தார் அச்சமயம் அவர் நகரில் உள்ள நீச்சல் தடாகம் ஒன்றில் நீச்சல் அடித்து விளையாடினார். அவரைச் சுற்றி மெய்ப்பாது காவலர்கள் காணப்பட்டனர்.

அதிபர் நீச்சல் அடிக்கும் புகைப்படங்களை ஹொங் கொங் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. (ஐ)

### வடக்கு- கிழக்கு மாகாண சபையில்

## நீண்ட கால சேவையில் உள்ள அதிகாரிகளை மாற்றக் கோரிக்கை

''வடக்கு -கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் சகல உயரதிகாரிகளையும் இடமாற்றம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் அங்கு நிலவும் ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்களை ஒழிக்க முடியும்''

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், கல்முனையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் முன் கண்டவாறு கூறினார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளையிட்டு பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது —

''வடக்கு கிழக்கு மாகாண சபையிலுள்ள சில உயரதிகாரிகள் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்கின்றனர். எமது தொழிற் சங்கக் கோரிக்கைகள் அங்கு உதாசீனம் செய்யப்படுகின்றன. ஊழல், மோசடிகள் அங்கு மலிந்துள்ளன. ஐந்து வருடங்களுக்கு மேலும் அங்கு உயரதிகாரிகள் கடமையாற்றுவதே இதற்குக் காரணமாகும்.

எனவே ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் சகல உயரதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்'' — என்று கூறினார்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணசபையின் செயற்பாடுகளை ஆராய்வதற்கென ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு [illegible] மாந்துறைப் பிரதேச சபை ஜனாதிபதியைக் கோரியுள்ளது. (ஐ-14)

ஈழத்தின் தலை சிறந்த

**''கலாஸ் குளிர்பானங்கள்''**

(சுகாதார முறைப்படி சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர், வாயுவுடன் வெளிநாட்டு மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது )

எமது தயாரிப்புகளில் சில:

★ கிறீம் சோடா ★ ஒறேஞ்
★ மோல்ட்டோ ★ பிளேன் சோடா
★ லெமெனட் ★ லைம் சோடா
★ பைனப்பிள் ★ இஞ்சிச் சோடா

**கலாஸ் குளிர்பான ஸ்தாபனம்**

166/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(50869)

### கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பாசிரியர்
செல்வி சின்னையாவின்
தாயார்
**திருமதி சின்னையாவின்**

மறைவினால் துயருறும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

98 வர்த்தகப் பிரிவு,
யா / யூனியன் கல்லூரி.

(50873)

### இதய அஞ்சலி

**நாகரத்தினம் செல்வரட்ணம்**
(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

எமது முன்னாள் மாகாணப் பணிப்பாளர்
**நா.செல்வரட்ணம்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்ினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளரும்,
சகல ஊழியர்களும்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம்,
யாழ்ப்பாணம். (50872)

### இதய அஞ்சலிகள்

**செல்வவினாயகப்பிரகாசம் வரப்பிரகாஷ்**
பேராதனைப் பல்கலைக்கழக
பொறியியல் பீடமாணவன்
**வரப்பிரகாஷின்**

திடீர் மரணத்தினால் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளது. இத்தகைய சம்பவம் மீண்டும் ஒருபோதும் எவருக்கும் எப்பல்கலைக்கழகத்திலும் நடைபெறக் கூடாது; நடைபெறவும் விடக்கூடாது. அவரது மரணத்தினால் துயருறும் பெற்றோர், உறவினர், பழையமாணவர்கள், கல்விச் சமூகத்தினர் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

பழைய மாணவர் சங்கம்,
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

(சி/1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம்மூலம் விபூதி, நூல் அனுப்ப விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு போன்ற வெளியிடங்களுக்கு விபூதி, நூல் முதலிய நேர்த்திக்கடன் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு புதிய ஒழுங்கு முறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விபூதி, நூல் முதலியவற்றை அனுப்ப விரும்புவோர் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கும் தபாலகப் பிரிவோடு வார நாள்களில் காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸாரின் பரிசோதனையின் பின்பே அவை தபாலில் சேர்க்கப்படுமாகையால் தபாலுறையை ஒட்டாமல் கொண்டுவருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்படுமானால் அவற்றில் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் உண்டு எனக் கொள்ளப்பட்டு அவை அனுப்பியவருக்கே மீண்டும் அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

# அதிகாரியின் வீட்டில் 11 பொலீஸார் வேலை!

மட்டக்களப்பு, ஒக். 30

வட—கிழக்கு யுத்த சேவையில் ஈடுபடுத்தப் படவேண்டிய 11 பொலீஸார் உயரதிகாரியொருவரின் வீடமைப்பு வேலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்து பொலீஸ் தலைமையகம் விசாரணைகளைமேற்கொண்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து வெலிக்கந்த பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பொலீஸ் கான்ஸ்டபிள்கள் யுத்தப்பிரதேசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியொருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-21]

# வாக்கெடுப்பு தோல்வி கண்டால் எம்.பி. பதவியைத் துறப்பேன்!

## பேர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 30

அரசமைப்புச் சீர்திருத்தம் சர்வ ஜன வாக்கெடுப்பில் நிராகரிக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன். என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

—நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும். வடக்கு கிழக்கு மாகாணப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்ட பின்பு அது நிச்சயம் ஒழிக்கப்படும்.

சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வி கண்டால் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறக்க இருக்கின்றார்கள். இதனால் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் அவர் மாத்தளையில் நடைபெற்ற வைபவமொன்றில் தெரிவித்துள்ளார். (ஐ-21)

# சுதேச விளையாட்டுக்களை ஊக்குவிக்க முயற்சி

வலிகாமம் தெற்கு, ஒக். 30

சுதேச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் நோக்குடன் உடுவில் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவரிடையே கிளித்தட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

உடுவில் - கோப்பாய் கோட்ட விளையாட்டு துறை செயலாளர் எஸ். மகாலிங்கம் இப்போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளார்.

இப் போட்டிகளில் 24 பாடசாலை அணிகள் மோதுகின்றன. சுன்னாகம், உடுவில் என இரு உப கோட்டங்களாகப் பிரித்து போட்டிகள் நடைபெறுகின்றன.

சுன்னாகம் நாகேஸ்வரி, ஏழாலை ம.வி. உடுவில் மகளிர், இணுவில் இந்து, இராமநாதன் ஆகிய கல்லூரி மைதானங்களில் 11 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நவம்பர் 5, 6 ஆம் திகதிகளில் அரை இறுதி, இறுதிப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் (ஐ - 152)

# எரியும் விளக்குக்கு எண்ணெய் விட்டபோது அது வெடித்தது!

## உடுவில் பகுதியில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக் 30

எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்குக்கு எண்ணெய் விட்டபோது அது வெடித்துச் சிதறி தீப்பற்றியதில் மூவர் எரிகாயத்துக்கு உள்ளாகினர்

உடுவில் பகுதியில் கடந்த திங்களன்று இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாலசிங்கம் அருள்மேரி (வயது 15), மரியதாஸ் யுவராசா (வயது 40), சின்னராசா சுகிர்தன் (வயது 12) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

அருள்மேரி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

வீட்டில் ரி.வியில் படம் ஓடிக்கொண்டிருந்த சமயம் படம் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அருகில் வைத்து விளக்குக்கு எண்ணெய் விடப்பட்டதாகவும் —

அப்பொழுதே அது வெடித்தாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# ஆசிரியர் விவரம் சேகரிப்பு

குருநகர், ஒக். 30

பிறமாவட்டப் பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் கடமைபுரியும் ஆசிரியர்களின் விவரங்கள் யாழ். கல்வி வலயங்களினால் கோட்ட ரீதியாக சேகரிக்கப்பட்டு வருகின்றன

இவ்விவரங்களில் இவ்வாறு தற்காலிக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியரின் நியமன வகை, முன்னர் கடமையாற்றிய நிரந்தரப் பாடசாலை, தற்போது இணைப்புச் செய்யப்பட்டுள்ள பாடசாலை ஆகிய தகவல்கள் கோரப்பட்டுள்ளன. (ஐ-51)

# மின் ஊழியர்கள் ஏமாற்றம்

இலங்கை மின்சாரசபையின் மின் இணைப்பாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இப்பரீட்சைக்கென யாழ். பிராந்தியத்திலிருந்தும் வடமராட்சிப்பகுதியிலிருந்தும் தெரிவாகிய ஊழியர்கள் போக்குவரத்துச்சீரின்மையால், உரிய நேரத்தில் பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியாமற் போயுள்ளது, (ஐ-109)

# நீதிபதி சென்று பார்த்தார்

மட்டக்களப்பு, ஒக். 30

மாணவன் வரப்பிரகாஷ் மீது ராகிங் சம்பவம் இடம்பெற்றதாகக் கருதப்படும் தொடகந்தெனியா வீட்டிற்கு நேற்று முன்தினம் காலை கண்டி மாவட்ட நீதிபதி நேரடியாகச்சென்று பார்வையிட்டு விசாரணையை மேற்கொண்டார்.

இச்சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு, பேராதனை, ருகுணு உட்பட சகல பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. [ஐ-21]

# காலமானார்

கொழும்பு, ஒக். 30

கொழும்பு விவேகானந்த சபை, கொழும்புவாழ் தமிழர் பணிக்குழு ஆகியவற்றின் தலைவர் வைத்திய கலாநிதி கே. வேலாயுதபிள்ளை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார். இவர் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவருமாவார்.

உரும்பராயைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பு மருத்துவக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் நுண்ணுயிரியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராகப்பணியாற்றியுள்ளார் (ஐ-5)

# முதியோர் தினவிழா

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவின் முதியோர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் கோப்பாய் பிரதேசச் செயலர் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் இங்குள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த 31 முதியவர்கள் கௌரவிக்கப்படுவார்கள். (ஐ-103)

# கலை விழா

நல்லூர், ஒக். 30

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாச்சாரக் கழகத்தின் தீபாவளிக் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் எஸ். கிருபாகரன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் [illegible] பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-103)

# பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பழைய இடத்தில் இயங்குகிறது

வடலியடைப்பில் இதுவரை காலமும் தற்காலிகமாக இடம் பெயர்ந்து இயங்கி வந்த பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி கடந்த 20 ஆம் திகதி முதல் பழைய இடத்தில் மீண்டும் இயங்கி வருகின்றது.

முற்றாகச் சேதமடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிதாக நிறுவப்பட்ட கல்லூரி கொட்டகை மண்டப திறப்பு விழா கடந்த 20 ஆம் திகதி கல்லூரி அதிபர் நா. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது பிரதம அதிதியாக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், சங்கானை கல்விக் கோட்ட அதிகாரி ஆ. வ. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-135)

# பளை விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள்

தென்மராட்சி, ஒக். 30

பளைப் பிரதேசத்தில் நிலக்கடலை உற்பத்திக்கென தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு 'கெயர்' ஸ்தாபனத்தினரால் கடந்த திங்களன்று நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டன. இவற்றுடன் இவ் விவசாயிகளுக்கு மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கான உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

இப் பிரதேசத்தில் நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்க பளைப்பகுதி விவசாயத் திணைக்களத்தினால் உரிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ-117)

# ஒரே இரவில் 65 கோழிகள் புலோலி கிழக்கில் திருட்டு

நெல்லியடி, ஒக். 30

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரம் பார்த்து இரு வீடுகளுக்குள் ஒரே சமயத்தில் உட்புகுந்த திருடர் கோஷ்டியினர் அங்கு கோழிக் கூடுகளில் நின்ற சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 65 கோழிகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு புலோலி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது.

ஒரு வீட்டில் நாற்பது கோழிகளும், பக்கத்து வீட்டில் 25 கோழிகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இதே சமயம் இப்பகுதியில் அடிக்கடி இரவு வேளைகளில் பல்வேறு விதமான திருட்டுக்களும் இடம்பெற்று வருவதனால் மக்கள் அச்சத்துடன் இரவைக் கழிக்க வேண்டியிருக்கின்றது. (ஐ-109)

# செய்திச் சாரம்

## முதியோர் கௌரவிப்பு

நெல்லியடி ஒக். 30

கரவெட்டி பிரதேச செயலகம், பிரதேச சபையுடன் இணைந்து நடத்திய சர்வதேச சிறுவர், முதியோர் தின விழாவில், சுமார் 90 வயதுக்கு மேற்பட்ட, ஏழு முதியோர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ. ஸ்ரீ நிவாசன் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது. (ஐ -109)

## சிரமதானம்

நெல்லியடி, ஒக். 30

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் அண்மையில், கரவெட்டி பிரதேச செயலக வளவை சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

இச் சிரமதான வைபவம் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெற்றது. (ஐ-109)

## அம்புலன்ஸ் கிடைத்தது

சண்டிலிப்பாய், ஒக். 30

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியொன்று கடந்த வாரம் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இங்குள்ள அவசர நோயாளர்கள் அதிக கட்டணம் செலுத்தப்பட்டு வாடகைக் கார் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

## பவள விழா ஏற்பாடு

சண்டிலிப்பாய், ஒக். 30

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பவள விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.

பவள விழா மலர் ஒன்றை வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மகா வித்தியாலய அதிபர் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் கடந்த வாரம் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. வித்தியாலய ஸ்தாபகருக்கு வெண்கல சிலையொன்றை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## மிதி வெடியில் சிக்கிய பசு

சண்டிலிப்பாய், ஒக். 30

மாதகல் மேற்கில் வயல் வெளியில் புல் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஒன்று மிதி வெடியில் சிக்கி படுகாயமடைந்துள்ளது. மாட்டின் இரு கால்களும் பலத்த சேதமடைந்துள்ளன. (ஐ-135)

## ஊசி மருந்து இல்லை

நெல்லியடி ஒக். 30

மந்திகை மருத்துவமனையின் பற்சிகிச்சைப் பிரிவில், விறைப்பு ஊசி முடிவடைந்துள்ளது. இதனால் இங்கு பல் பிடுங்கும் வேலை நிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே சுகாதாரத் திணைக்களம் வழங்கிய விறைப்பு ஊசி இது வரை காலமும் பயன் படுத்தப்பட்டுள்ளது. தற்போது பற்சிகிச்சைப் பிரிவுக்கு வரும் வெளிநோயாளிகள் தொகை அதிகரித்து வருவதனால், விறைப்பு ஊசிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. (ஐ - 109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

## தீபாவளிச் சிந்தனை

மனிதனை மனிதப் பண்போடு வாழ்ந்து உயர்நிலையடைய வழிகாட்டுவனவே சமய விழாக்கள்.

பாவிகளையும் மன்னிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை உணர்த்துவது தீபாவளி. அத்துடன் அந்த மன்னிப்பை உலகறிய வைத்து உய்வு நிலைக்கு உயர்த்திவிடுவதனையும் இவ்விழா மூலமே அறியக்கிடக்கிறது. நாட்டிலே தர்மமும், நீதியும் ஓங்க வேண்டுமென்ற குறிக்கோளை எடுத்துக் காட்டுவனவே இவை.

நரகாசுரன் கொடியவனாக இருந்தாலும் அவன் மறைந்த நாள் எல்லோருக்கும் இனிய நன்னாளாக வேண்டுமென்று வரங்கொடுத்த பெருமாளை நாம் நினைந்து நினைந்து போற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நாளில் தானதருமம் புரிதல், வழிபாடு ஆற்றுதல், புத்தாடைகள் வாங்கி இரவலர்க்கு அளித்துத் தானும் அணிதல், குழந்தைகள், முதியோர், ஏழைகள், ஊனமுற்றோர் ஆகியோரை மகிழ்விக்கும் செயல்களில் ஈடுபடுதல் ஆகியவை இன்றியமையாத நிகழ்வுகளாக அமைய வேண்டும். பஞ்சமா பாதகங்களைமுற்றாக ஒதுக்கி இறை தியானம் மற்றும் அறச் செயல்களால் நம்மை நாமே மகிழ்வித்தும் சமூகத்தை நேசித்தும் கருமமாற்றுவதற்கு ஆயத்தமாக வேண்டும். இதுவே மனித இனத்தின் உய்வுக்கு வழிகாட்டும் என்பது உறுதி.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி

## நலிவகற்றுவோம்

ஓடி ஓடி வாழ்க்கையில் நாம்
தேடிச் சேர்த்த பொருள் கொண்டு
கூடி ஆடி நாமெல்லாம்
பாடி மகிழும் இந்நாளில்
வாடி வருந்தும் வறியோரை
நாடிச் சென்று நலிவகற்றி
கோடி கொடுத்து மகிழ்வோமே
கோடி இன்பம் பெறலாமே.

— மட்டுவில் சதாசிவம்

# அறியாமை, அசுர குணம் நீக்கி

# அன்பைப் பெருக்கப் பழகுவோம்

இந்துக்களின் இனிய விழாக்கள் ஒவ்வொன்றும் வாழும் மனிதனை புனிதப்படுத்த எழுந்தவை. கடவுளுக்கு நன்றி தெரிவிப்பதோடு உறவுகளைப் புதுப்பித்து மனிதன் தன் அறியாமைகளை நீக்குவதற்கு இந்த விழாக்கள் உதவுகின்றன. தீபாவளி என்பதன் பொருளினை தீபம் — விளக்கு: ஆவளி — வரிசை என்பதனைக் கருத்திற் கொண்டு தீபங்களை வரிசையாக ஏற்றி இறைவனை ஒளிமயமாக வழிபாடு ஆற்றும் நாள் என முன்னோர்கள் வகுத்துள்ளார்கள்.

இருள் புறத்தேயும் மனிதனின் அகத்தினுள்ளும் வாழக்கூடியது. அகத்தில் இருள் சேருகின்ற மனிதனிடையே அறியாமை என்ற அபாயம் குடி கொள்ளும். அறியாமையினாலேயே மனிதன் ஆபத்துக்களை விளைவித்துக் கொள்வான். அறியாமையில் இருந்து விடுபடுவதற்கு ஆற்றப்படும் வழிபாடே விளக்கேற்றி வழிபாடு செய்வது என்பது கிரியைகளில் கூறப்படும் விளக்கமாகும்.

விளக்கின் ஒளியிலும் இறைவனைக் காண்பவர்கள் இந்துக்கள். எந்நாளும் மங்கல விளக்கு ஏற்றி எம்மைக் காத்துக் கொள் என்று வழிபாடு ஆற்றுவது மரபு, எனினும் தீபாவளி என்னும் இத்திரு நாளில் அடுக்கடுக்காகத் தீபம் ஏற்றி எம் அக இருட்டை அகற்றி அறியாமையினால் செய்த பாவங்களை மன்னித்து விடு என்று வழிபாடு ஆற்றுதல்முறை. விழாக்களின் போதெல்லாம் நித்திய வழிபாட்டை விட நீள இறைவனை நினைத்து தன்னைச் சார்ந்த சுற்றத்தையும் மகிழச் செய்வது மனிதனின் கடமை.

விருப்பு அறாச்சுற்றம்இயையின்
அருப்பு அறா ஆக்கம்
பலவும் தரும் —

என்பது வள்ளுவர் கூற்று.

அதாவது ஒருவனுக்கு அன்பு நீங்காத சுற்றம் கிடைத்தால் அது அவனுக்குக் குறையாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும். குறையாத செல்வங்களை நாம் அனுபவிப்பதற்கு சுற்றம் பேண வேண்டும். சுற்றம் பேணுவதற்கு விழாக்களைப் பயன்படுத்த வேண்டும். கோபங்களை மறந்து உறவை இந்நாளில் வளர்க்க வேண்டும்.

### அன்பைப் பெருக்குக

அறியாமையையும் அசுர குணத்தையும் நீக்குகின்ற வழிபாட்டுக்கும், அன்பைப் பெருக்குவதற்குமான இந்நாளை மிகவும் புண்ணிய நாளாகக் கருதவேண்டும்.


பல உயிர்களுக்கு தீங்கு செய்த அசுரர்களை அழித்த இறைவனிடம் எம்மிடையே உள்ள அசுரக் குணங்களை இந்நாளில் போக்கி விடு என வேண்டுதல் செய்ய வேண்டும். இதைவிடுத்து இந்த நாளில் பிற உயிர்களை - அறியாமையினால் சிலர் வருத்தி உண்டு மகிழ நினைத்தல் பெரும் பாவமாகும்.

புண்ணியம் சேர்க்க வேண்டிய காலத்தில் பாவத்தைச் சேமித்து விடாதீர்கள் – இது யோக சுவாமி திருவாக்கு.

எவர்க்கும் இரங்கி இன்னருள்தரும் நாள் தீபாவளி

(9 ஆம் பக்கம் பாக்க)

ஆறு- திருமுருகன்




ஓர் இளம் ஓவியரின் கற்பனையில்
தீபாவளி நிகழ்வு இப்படியும் தெரிகிறது


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது அன்பான
தீபாவளி வாழ்த்துக்கள்

ராஜா கிறீம் ஹவுஸ்

தேனோடையில் ஒரு குளிர்வாடை
கோடைக்கானல் வரட்சியில் ஒரு குளிர்ச்சி தரும்

★ ஸ்பெசல் ஐஸ்கிறீம்
★ நட்ஸ் ஐஸ்கிறீம்
★ சொக்லேட் ஐஸ்கிறீம்
★ கிறீம் சர்பத்
★ புறூட்சலாட் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ ஜெலி ஐஸ்கிறீம்
★ ஒரேஞ்ஜூஸ்

★ நெல்லிக்கிறஸ் மற்றும் மட்டன்றோல், கட்லட், கேக், மஸ்கட், பிஸ்கட், வேறு என்ன வேண்டும்?

நீங்கள் வரவேண்டும்: வரவேற்கின்றோம்

" ஒருமுறை விஜயம் செய்து எமது ஸ்பெசல் ஐஸ்கிறீம் இன்சுவையைப் பரீட்சித்துப் பாருங்களேன் "

ராஜா கிறீம் ஹவுஸ்
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



★ தீபாவளி வாழ்த்துக்கள் ★

சாரங்கா நகைமாட ஸ்தாபனத்தினர்

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு எம் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

★ வண்ணநகை யுகத்து வளமார் வகையனைத்தும் எண்ணம் போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் நகைமாடம் ★

சாரங்கா நகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இணையகம்)

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

அருள்முருகன் நகையகம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தலைமை அகம்)

சிவா நகைமாடம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(கிளை அகம்)

பழைய நகைகள் கூடுதலான பெறுமதிக்கு வாங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

## பண்டிகைகளை ஆன்மீக வழியில் கொண்டாடப் பழகுதல் அவசியம்

சமூகஜோதி **கா. கணேசதாசன்**

தீபாவளிப் பண்டிகையை இந்து மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். இல்லங்கள் தோறும் புதுப் பொலிவும், மகிழ்ச்சியும் நிறைந்து விளங்கும். அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து, நீராடி நித்திய அலுவல்களை நிறைவேற்றிப் புத்தாடைகள புனைந்து மகிழ்ச்சியுடன் பலகாரம் பட்சணங்களை உண்டு கொண்டாடுவார்கள். ஆலயங்களுக்கும் சென்று விசேட வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுவார்கள்.

இத்தினத்தில் உதயத்தில் தீபமேற்றி வணங்கினால் இல்லங்களில் லக்ஷ்மி வாசம் செய்வாள் என்று புராணங்கள் கூறுகின்றன.

தீப+ஆவளி என்பதே தீபாவளி ஆயிற்று. தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து அதிகாலையில் இல்லங்கள் தோறும் வழிபட்டு புற இருளையும் அக இருளையும் அகற்றி ஞான ஒளி வேண்டிக் கொண்டாடும் நாளே தீபாவளித் திருநாள் என்று வட இந்திய மக்கள் கொண்டாடும் வழக்கம் உண்டு.

அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும்.

''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்கிறார் திருவள்ளுவர், மனத்தினது அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவாகிய ஞான ஒளியைப் பெருக்க வேண்டும். இதனை உணர்த்துவதே இத் திருநாளாகும்,

தீபாவளி பற்றிய புராணக் கதை ஒன்றுள்ளது. பலம் பெற்ற நரகாசுரன் என்ற அரக்கன் ஆணவத் திமிர் கொண்டு நல்லவர்களை வருத்தினான். சான்றோர் சஞ்சலமடைந்து இறைவனிடம் முறையிட்டனர். விஷ்ணுமூர்த்தியாக இறைவன் தோன்றி அசுரனைக் கொன்றான். இறக்கும் வேளை அவன் ஒரு வரம் கேட்டான்.

''நான் இறந்த நாளில் என்னை நினைந்து வழிபடுவோருக்கு அருள்புரிய வேண்டும்'' என்பதே அந்தவரமாகும்.

தன்னருள் புரியும் தயாநிதியாகிய இறைவன் கேட்ட வரத்தை வழங்கினான். அன்று தொடக்கம் தீபாவளியும் கொண்டாடப்படுகின்றது.

தாங்க முடியாத துன்பங்கள் வரும்போது இறைவனை உறுதியாக நினைத்து வழிபட்டால் துன்பங்களை அழித்து அடியார்க்கு அருள்புரிவான் என்பதை விளக்குவதாகவும் தீபாவளித் தினம் அமைகின்றது.

''மாதா, பிதா, குரு, தெய்வம்'' என்ற வாக்கிற்கமைய இளைஞர்கள் இத்தினத்தில் அவர்களது மனதை மகிழ்வித்து அவர்களிடமிருந்து அன்புப் பரிசுகளைப் பெற்று பேருவகை பெற வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் நாம் அனைவரும் வீண் ஆரவாரத்திற்கோ, பகட்டான ஆடம்பரத்திற்கோ இடமளியாது தூய்மையான, எளிமையான ஆன்மீக வழியில் திருநாள்களையும் பண்டிகைகளையும் கொண்டாடப் பழக வேண்டும்.

இறைவன் எல்லா உயிர்களிலும் கோயில் கொண்டிருக்கிறான். எனவே தீபாவளியை மிகச் சுருக்கமாக எளிமையாகக் கொண்டாடி அல்லலுற்று அவதிப்படும் ஏழை எளியவர்களுக்கு பொருத்தமாகச் செய்வது சிறந்தது. அமைதியின்றி வாழும் எமது மக்களை இந்நாளில் நினைவு கொள்ள வேண்டும். அவர்களுக்கும் நமக்கும் விடிவு கிடைக்க இறைவனை இறைஞ்சுவோம். ★

## எழுந்து வா, எங்கள் கண்ணா

கண்ணபரமாத்மா! உனக்கு
பன்னீர் பால் தயிரோடு
கண்ணீரால்தானே...
அபிஷேகங்கள் அதிகம்.
எந்தத் தப்புமே பண்ணாது
இந்த மனிதர்
ஏனிப்படித் துயரப்படுகின்றனர்?
உன் பாதங்களைப்
பற்றி நிற்கும் கரங்கள்
போதாதென்று நினைத்திட்டாயோ?
நீலவிழிக் கண்ணா!
நிம்மதியைத் தாவென்று
இரவு பகலாய்
இரந்து நிற்கிறோமே!
உன் உள்ளம் உருகலையா?
கண்ணா! இன்றிலிருந்தாவது
எங்கள் துயரங்களைத் தீர்க்க,
எழுந்து வாராயோ?
மணிவண்ணா! ஆயிரமாயிரமாக
மன்றாடியே நிற்கிறோம்,
எழுந்தே வா, எங்கள் கண்ணா!

- மீசாலையூர் கமலா


✠ ✠ ✠ ✠

**தீபாவளி நல் வாழ்த்துகள்**

அனைவருக்கும் உரித்தாகுக!

✠ ✠ ✠ ✠



யாழ். குடாநாட்டில் மூக்குக்கண்ணாடிகள் வழங்குவதில் நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் இவையனைத்தும் ஒருங்கமைந்த தனித்துவம் வாய்ந்தவர்கள்.

இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம்களும், போட்டோகிறே, போட்டோ பிறவுண் கண்ணாடிகளும், நீங்கள் தெரிவு செய்து அதே நாளில் பெற்றுக் கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**எரிக் கணேஷ்**

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்

வண்ணை வட மேற்கு
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



**இனிதே வந்திருக்கும் இத் தீபத் திருநாளில்...**

துணி மணியைத் தேர்ந்திட
அணியணியாய்த் திரண்டிடுவீர்!

**ராகம்ஸ் பட்டுச்சோலை**

**ராகம்ஸ்** தேடி தேர்ந்திடுவீர் கோடி

இனிதான இத் தீபத் திருநாளில்
எங்கள் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் உளங் கனிந்த

**தீபாவளி நல் வாழ்த்துக்கள்**

உரித்தாகட்டும்.

**ராகம்ஸ் பட்டுச் சோலை,**
**24, நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**



**வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்**

★ **எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!** ★

பண்டிகை வரும் நன்னாளில் பெண்டிர், ஆடவர், சிறுவர் பெரியவர் ஆடைத் தெரிவின் பட்டாடை உலகம்
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனங்கள்

**ராசி சில்க்ஸ்**

70, 71 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



**நல்லி சில்க்ஸ்**

121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
( ராணி தியேட்டர் அருகில் )

**“ராசி சில்க்ஸ்”** ஸ்தாபனத்தார் தங்களின் 10 ஆவது ஆண்டு நிறைவின் சஞ்சாரத்தில் புதிய நிறுவனமான **“நல்லி சில்க்ஸ்”** ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளார்கள் என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

## தீபாவளியின் உட்பொருளை உளங்கொண்டு ஒழுகுவோம்

இந்து மதத்தவர்களாகிய எம்மிடையே உயர் பண்புகளை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைவன பண்டுதொட்டுக் காலங்காலமாகப் போற்றிப் பேணப்பட்டுவரும் விழாக்களும் பண்டிகைகளுமாகும். இத்தகைய பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும்.

தீபாவளிப் பண்டிகையைப் பற்றி பற்பல புராணங்களும் வெவ்வேறு கதைகளைக் கூறுகின்றன. ஆயினும் அனேகமானவற்றில் நரகாசுரவதம் பற்றியே பேசப்படுகின்றது.

அன்பு, தயை, கருணை முதலிய அருங்குணங்கள் மறைந்து இன்று எம்மிடையே சுயநலநோக்கும், போட்டி, பொறாமை, பேராசை, கோபம் என்னும் தீயகுணங்களும் பெருகிவிட்டன. இவைகளே எம்மை இடர்ப்படுத்தும் அசுரத் தன்மைகளாக எங்கும் நிறைந்திருக்கின்றன.

அன்று நரகாசுரன் எம்பான் கண்ணனால் வதம் செய்யப்பட்டபோது அவன் அன்னையாம் பூமாதேவி கண்ணனிடம் வரங்கேட்டாள்.

''எனது மகன் இறந்துவிட்டான். பரவாயில்லை. எனது மகனால் மக்கள் துயரடைந்தனர். துன்பப்பட்டனர். இனி மக்கள் இன்பமாக வாழ்வர். அன்றியும் அவன் கொடியபாவங்களைச் செய்த போதும் உமது திருவருட் காட்சி கிடைத்துள்ளது. எனவே அவன் புண்ணியம் பெற்றவன் ஆகின்றான். இதிலே என் துன்பம் அளப்பரியது. அதனைப் பொறுத்துக் கொள்கின்றேன். அன்றியும் உமது திருக்கரத்தால் மாண்டான் என மகிழ்கின்றேன்.

''எனவே சுவாமி! இந்நாளை உலக மக்கள் எல்லோரும் எண்ணெய் தேய்த்து நீராடி புத்தாடை புனைந்து களிப்புடன் கொண்டாட வேண்டும்'' என்று கண்ணனிடம் வேண்டிக்கொண்டாள்.

நரகாசுரன் வதஞ் செய்யப்பட்ட ஐப்பசி மாத தேய்

**வ. குமாரசாமி ஐயர்**

(8 ஆம பக்கம் பார்க்க)

## அசுர மனங்களை அழிந்து...

புலர்வாய் தீபத் திருநாளே
புதுமைகள் பலவும் நிறைத்திங்கே
உலகம் வியக்கத் தமிழர்கள்
உரிமை சிறக்க இருள்விலக!

உயிர்ப்பலி செய்து மதுவோடு
உண்டு களிக்கும் மன இருள்கள்
துயர் கிலிகலந்த வாழ்வெல்லாம்
தூரவிலக அருள் ஒளிர!

களவு காமம் பொய்மாயை
தலைவிரித் தாடும் இன வெறியை
அசுர மனங்களை அழித்து நல்
அருளைச் சொரிவாய் பரமாத்மாவே

— நெடுந்தீவு லக்ஸ்மன்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
★ தீபாவளி நல் வாழ்த்துக்கள் ★

நவ நாகரிக
பட்டு, பருத்திப் புடைவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்**

54, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

அழகுசாதன, அலங்கார
அன்பளிப்புப் பொருள்கள்,
கைக்கடிகாரங்கள்,
எவர்சில்வர் பொருட்கள் வாங்க
சிறந்த ஸ்தாபனம்

**அஜந்தாஸ் ரேட்ஸ்**

66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு எமது அன்பான
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

கண்டவுடன் அகமகிழ்ந்து, கொண்டவுடன் அதைக் கைக்கொண்டு,
அணிந்துமகிழ நாடவேண்டிய ஒரே இடம்.

**கோபிகா ஆடையகம்**

4, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

சீமாட்டி வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் உட்பட வயது வேறுபாடுகளுக்கு ஏற்ற இரு பாலாருக்குமான தைத்த ஆடைகள் மற்றும் துணி வகைகளை நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள:

**சீமாட்டி புடைவைக்கடல்**

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**பெட்டா எசன்ஸ்** சப்ளையர்ஸின்
**தீபாவளி நல் வாழ்த்துக்கள்!**

((★◀◀~~~~~~~~~~~~~~~~▶▶★))

❉ ஐஸ்கிறீம் ❉ குளிர்பானம் ❉ கேக்வகை ❉ பிஸ்கட் ❉ இனிப்பு ❉ பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல விதமான மூலப் பொருள்களும்,
❉ ஊதுபத்தி ❉ சாம்பிராணி வாசனைத்திரவியம் ❉ ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் மூலிகைவகைகள்

❉ குங்குமம் ❉ குங்குமப் பூ ❉ எண்ணெய் ❉ நெய் ❉ பிஸ்கட்
❉ சொக்கிளேட் ❉ சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள் ❉ டொபி வகைகள்.

✠ எசன்ஸ் வகைகள் ✠ எமல்சன் வகைகள் ✠ கலர்பவுடர் வகைகள்
✠ கேக் தயாரிக்கும் பொருள்கள் ✠ கேக் அலங்காரப்பொருள்கள்
✠ பேக்கரித் தயாரிப்புக்குத் தேவையான பொருள்கள்.

மற்றும் அச்சகத்துக்குத் தேவையான ✠ காகித வகைகள் ✠ மை வகைகள்.

**பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்**
**பேப்பர்மேர்ச்சன்ட்**

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

109, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உளங்கனிந்த தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

உங்களது புகைப்படங்களை விரைவில் பெற்றுக் கொள்ள பிலிம் றோல்களை எம்மிடம் ஒப்படையுங்கள்

**சுனில் ஆட்ஸ்**

272, ஸ்ரான்லி வீதி (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

இனிய தீபாவளி **வாழ்த்துக்கள்**

வர்த்தகர்களுக்கு மீண்டும் மொத்தவியாபாரம்
நியாய விலையில் பெற்றுங்கொள்ளலாம்!

**ஜெயா அழகு மாடம்**

127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பரடைஸ் ஹோட்டலுக்கு அருகில்)
சில்லறை வியாபாரம்
New No 357 / 42, (149) நவீனசந்தை,
(வைரவர் கோயிலருகில்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பிதழ்

## விரைவாகத் தந்திடுவாய்!

தேவர் பட்ட துயரையெல்லாம் தீர்த்தழித்த மாயவனே
ஆருமற்ற அனாதைகளாய் அல்லலுறும் தமிழரெமை
நாடுபோற்றும் மக்களாய் விளங்கவைத்தல் உன்கடனே!
தேரேறிச்சென்ற கண்ணா! நித்தமுனைத் துதித்திடுவோம்.

போர்மேகம் சூழ்ந்தெம்மை நடுநடுங்க வைத்தபோதும்
கார்மேகம் கருக்கொண்டு கடிகமழ்ந்து வந்தபோதும்
பொங்குமனம் களிகொண்டு உனைத் துதித்தோம்
நாரணனே நம்பிவிட்டோம் எமக்கருள்வாய்

தேவர்களின் மகிழ்ச்சியிலே தமிழர் நாம் பங்குகொண்டோம்
தீபமேற்றித் திருநாளை திண்ணியராய்க் கொண்டாடினோம்
ஏதுபயன் எம் வாழ்வில் இன்றுவரை இன்பமில்லை
சொல்லு கண்ணா! விரைவாகத் தந்திடுவாய் அதனை!

- ஆனந்தன்

## இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் தீபாவளிக்கு வெவ்வேறு கதைகள்

தீபாவளி பாரததேசமெங்கும் சிறப்புடன் கொண்டாடப்படும் விழாவாகும். தீபாவளி இந்தியாவின் ஒரு பொதுப் பண்டிகையாக இருந்தாலும் இதனை வட இந்திய மக்கள் ஒருவிதமாகவும் தென்னிந்திய மக்கள் ஒரு விதமாகவும் கொண்டாடுவர்.

தீபாவளித் திருநாள் தொடர்பாக வட இந்திய மக்கள் ஒருகதையினைக் கூறுகின்றனர்.

அந்தக் கதை வருமாறு:

பதினைந்து ஆண்டு காலம் வனவாசத்தை முடித்துக் கொண்டு இராவணனைக் கொன்றழித்த ஜெயராமனாக இராம பிரானானவர் அயோத்தி மாநகருக்குத் திரும்புகின்றார். இராமன் அயோத்தி வரும் மகிழ்ச்சியினை மக்கள் இல்லங்கள் தோறும் தீபங்களை ஏற்றி வைத்துக் கொண்டாடி வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள் — என்பதாகும்.

தென்பாரத மக்கள் தீபாவளி தொடர்பாக வேறு கதையினைக் கூறுகின்றனர்.

திருமால் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்ற புராணக் கதை நமக்கெல்லாம் தெரிந்ததே. திருமால் பன்றி அவதாரம் எடுத்திருந்த சமயம் அவருக்குப் பூதேவியிடம் பிறந்த குழந்தையின் பெயர் நரகாசுரன் என்பதாகும்.

நரகாசுரனுடன் போரிட கண்ணபிரான் புறப்பட்ட போது அவர் அமர்ந்திருந்த இரதத்தை சத்தியபாமா செலுத்தினார், போரில் படுகாயமுற்று நரகாசுரன் விழுந்தபோது அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

'நான் மனந்திருந்தி மரணமடைந்த இந்த நாளில் என்னை உலகமக்கள் என்றும் நினைவில் கொள்ளுமாறு ஏதாவது செய்ய வேண்டும்' என நரகாசுரன் கேட்டுக் கொண்டான். கண்ணபிரான் நரகாசுரனை நோக்கி நரனே இன்று சதுர்த்தி நாள் உன் நினைவாக இந்நாள் இனி ஆண்டு தோறும் நரக சதுர்த்தி என்று அழைக்கப் படும்.

அன்று அதிகாலை நேரத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்பவர்களுக்கு, கங்கையில் ஸ்நானம் செய்தால் ஏற்படக் கூடிய புண்ணியத்தை அளிக்கிறேன். எண்ணெய்ஸ்நானம் செய்துவிட்டு மக்கள் புத்தாடை அணிந்து என்னை வழிபடட்டும். அவர்களை நான் வாழவைக்கிறேன்.

தீபாவளிப் பண்டிகைக்குக் காரணமாக தென்னகமக்கள் கூறும் காரணம் இது.

காரணங்கள் வெவ்வேறாக இருப்பினும் தீபாவளிகு தூகலமான ஆன்மீக கொண்டாட்டமாகப் பாரததேசமெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதென்னவோ உண்மைதான்.

இந்தப் புனித நன்னாளில் கிருஷ்ண பகவானை வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக. தீபாவளித் திருநாள் இறைவழிபாட்டுக்குரிய நாள் என்பதை இந்துக்கள் சகலரும் உணர்ந்து நடந்தால் மக்களுக்கு நலம்பல கிடைக்கும்.

**க.சிவசங்கரநாதன்**

### தீபாவளியின்...

(ஏழாம் பக்கத் தொடர்)

பிறை சதுர்த்தசி (நரகசதுர்த்தசி) தினம் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

தீபாவளியின் தலையாய தத்துவம் யாது? மனிதனாகப் பிறந்திடில் இன்பமும் துன்பமும் தொடர்ந்த வண்ணமாக இருக்கும். இருளும் ஒளியும், பகலும் இரவும், சூடும் குளிரும்போல இன்பமும் துன்பமும் மாறி மாறி எம்மைப் பற்றிக் கொண்டே இருக்கும். இதுவே வாழ்வின் தத்துவம்.

தீபாவளி என்பது, உயிர்களின் நன்மைகருதி ஒரு தாய் கருணையுடன் விடுத்த வேண்டுகோளால் கொண்டாடப்படுகிறது. ஆனால் இன்று இத் திருநாளில் கைக்கொள்ளப்படும் சில பழக்கங்கள் இந்தப் பண்டிகையின் கருத்துக்கே முரணாக அமைகின்றன.

இப் புனித தீபாவளிப் பண்டிகையின் உட்பொருளை உளங்கொண்டு, அன்பு கருணை தியாகம் என்னும் பண்புகளை எம்முள்ளத்தில் வளர்த்து, ஆசை, கோபம், பொறாமை போன்ற தீய குணங்களை மாய்த்து, உலகமெல்லாம் சேமமாக இருக்க எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பயன் பெறுவோமாக. ★


அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

குலம் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தாரின்
தீபாவளி வாழ்த்துக்கள்



★ சுவை மிகு ஐஸ்கிறீம், குளிர்பானவகைகள்
★ மற்றும் சிற்றுண்டி வகைகள்
★ சுவைத்து மகிழ்ந்திட யாழ். நகரிலும்!

தற்போது

குலம் கிறீம் ஹவுஸ்



226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மகாநதியின்

இனிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

கண்கவர் வர்ணங்களில் பகட்டாய் மிளிர வைக்கும்
புடவைத் தெரிவிற்கு நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்:

மகாநதி புடவையகம்

(முகூர்த்த பட்டுப் புடவைகளுக்கு அதிர்ஷ்டமானஇடம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

ரேஸ்ரி வாடிக்கையாளர்கள்,
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

Tasty PRODUCTS

Tasty Produets புதிய மெருகுடன்
★ ஜாம் வகைகள் ★ நெல்லிரசம்
★ கோடியல் வகைகள்
★ சோஸ்வகைகள் ★ ஊறுகாய்

யாழ். குடாநாடு பூராவும் கிடைக்கும். திருகு மூடியுடன் ஜாம் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

ரேஸ்ரிலைன் இன்டஸ்றீஸ்

-Tasty- சுவையின் மகாராஜன்
உங்கள் ஆதரவே எங்கள். சேவை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
(50081)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


நவீன அழகிய

# தங்க நகைகளுக்கு

பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

## LALITHA

22 கரட் தங்க நகைகள்

விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தர வாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.


# லலிதா ஜுவல்லறி

"லலிதா மாளிகை"
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.

(50858)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 01 — 1939

மறைவு: 30 — 09 — 1997

அமரர்

## நயினை சின்னத்தம்பி சந்திரசேகரம்

[உதவி விநியோக முகாமையாளர் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொழும்பு]
[இ. பெ. கூ. முன்னாள் நிறைவேற்று அதிகாரி, யாழ்ப்பாணம்.]

அறிவிற்கு ஊற்றாய், ஆற்றலுக்குப் பொருளாய், அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய், கருணையின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எம் இதயத்தைக் கொள்ளை கொண்ட தலைவ! தங்கள் திடீர் மறைவு எம்மையெல்லாம் மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டது. தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நயினை நாகபூஷணியம்மையை வேண்டி நிற்கிறோம்.

இவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் வழங்கியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், மருகர்,
உற்றார், உறவினர்.

தகவல்:
சி. செல்வரத்தினம்,
சோமுகி, முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(50821)

## சமய சந்நிதியில்

வடமராட்சி, ஒக். 30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வானொலிக் கலைஞர் புலோலியூர் எம். அருட்செல்வத்தின் இன்னிசை நிகழ்ச்சி இடம் பெறும்.

இந் நிகழ்வுக்கான அறிமுக வுரையை ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. நவரெத்தினம் நிகழ்த்துவார்.

(ஐ-173)

## அறியாமை...

(ஐந்தாம் பக்கத்தொடர்)

என்பதற்கு எத்தனையோர் அடியவர்களின் அனுபூதிக் கதைகள் உண்டு. ஞான ஒளியுடைய சித்தர்கள் உலாவிய யாழ்ப்பாண வையகத்தில் பல அடியார்களுக்கு அக இருளை அகற்றி மெய்யொளி ஊட்டியவர் கடையிற் சுவாமிகள் என்னும் பெரு ஞானி. தீபாவளித் திருநாளிலே ஓர் ஏழை இறைவன் சன்னிதானத்தில் கற்பூரம் எரித்து விட்டுத் தன் வறுமையின் கொடுமையை முறையிட்டு விட்டு வீதியில் சென்று கொண்டு இருந்தான். தன் இல்லத்தில் மனைவி, பிள்ளைகள் புத்தாடையோ, இனிய உணவுப் பண்டமோ அனுபவிக்க முடியாத வறுமையை எண்ணிப் பெருமூச்சுடன் செல்லும் வழியில் கடையிற் சுவாமிகள் தன் இடுப்பில் இருந்த கந்தையான துண்டை மழை வெள்ளத்தில் நனைத்து விட்டு அந்த ஏழையின் முதுகில் போட்டு, இன்று பாவங்கள் தொலையும் நாள். பாவமில்லைப் போ என்று ஆசீர்வதித்து விட்டுப் போனார். சுவாமிகளின் கந்தல் துண்டை கருணைப் பிரசாதமாக கரம் பற்றிச் சென்ற ஏழையின் காலில் ஒரு பொதி சற்று நேரத்தில் தட்டுப்பட்டது. விரித்தபோது பெரும் பெறுமதி முடிச்சு. அத்திரு முடிச்சுப் பெற்ற ஏழை யாழ்ப்பாணத்துச் செல்வந்தர்களில் முதன்மையான ஒருவராக விளங்கிய வரலாறு பலருக்குத் தெரியும்.

கவலைகளை விடுத்து கருணையோடு கடவுளை வழிபாடு ஆற்றி இன்பம் பெறும் நாள் இப் பெருநாள். எனவே இத்திருநாளில் இறைவனிடம் எமது குறைகளை நிறைவாக்க ஒளியேற்ற முயல்வோமாக. ★

# இலவச கண் பரிசோதனை

தென்மராட்சி, ஒக். 30

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவச கண்பரிசோதனையையும் சலரோகம் இரத்த அழுத்தம், வாய்ப்புற்று ஆகிய பரிசோதனைகளையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடத்த உள்ளனர்.

இப்பரிசோதனைகளில் கலந்து கொள்ள விரும்புவோர் மீசாலை வடக்கு பிரிவு குடும்ப நலசேவையாளரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கழக கண்பார்வைப்பிரிவு தலைவர் லயன். இ. கா. நவரத்தினம் அறிவித்துள்ளார்.

(ஐ-117)


## நல்லூர் ப.நோ.கூ. சங்கம் அறிவித்தல்

விதை வெங்காயம் விற்பனை
(வல்லாரை ஈக்குப்பிடி)

விதை வெங்காயம் தேவையானோர் அலுவலக நேரத்தில் சங்கப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
நல்லூர்
ப.நோ. கூ. சங்கம்

(சி-1921)


# இதய அஞ்சலி



தோற்றம்: 22 — 06 — 1976

மறைவு: 26 — 10 — 1997

## செல்வ வினாயகபிரகாசம் வரப்பிரகாஷ்

(பழைய மாணவன், New Science Hall)

ரணமாக்கும் ராக்கிங்
பிணமாக்கிய மனிதன்

ஆசிரியர், ஊழியர், நிர்வாகி

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD,
JAFFNA.

(50827)

# மரண அறிவித்தல்கள்

## கதிரிப்பிள்ளை நவரெத்தினராசா

(தொண்டமானாறு)

தொண்டமானாறைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியில் வசித்தவருமான தொண்டமானாறு சந்தி கடைக்கார நவரெத்தினம் என அழைக்கப்படும் கதிரிப்பிள்ளை நவரெத்தினராசா 1997-10-28 இரவு 9.45 மணிக்கு இறையதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியிலுள்ள அவரது தற்காலிக வசிப்பிடத்தில் 29-10-97 புதன் மாலை 4 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரியைகள் தொண்டமானாறு காட்டுப் புலம் இந்து மயானத்தில் இடம்பெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. காந்திமதி [மகள்]
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.

(50856)

## அப்பாத்துரை கதிர்காமராசா

சித்தங்கேணியை சேர்ந்த அப்பாத்துரை கதிர்காமராசா 26/10/97 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற Dr. அப்பாத்துரை-மாரிமுத்து ஆகியோரின் மகனும், அன்னலக்ஷ்மி, அப்பாத்துரை, வானதி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம், மாரிமுத்தம்மா ஆகியோரது மருமகனும், கருணாகரன், வைத்திலிங்கம், ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற கனகசபை மற்றும் மாணிக்கவாசகர் (சிங்கப்பூர்), மற்றும் பரமன், கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் நவராசாவின் (கனடா) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26/10/97 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. பரமன்
(மைத்துனன்)
வட்டு. கிழக்கு,
சித்தங்கேணி.

[50855]


## எமது தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்

★ அழகு சாதனங்கள்
★ அலங்காரப் பொருள்கள்
★ நூல்
★ பாக் வகைகள்
★ சின்னஞ் சிறார்களின் விளையாட்டுப் பொருள்கள்
★ எவசில்வர்
★ பிளாஸ்டிக் பாத்திரங்கள்
★ லேஸ்

எத்தனை, எத்தனையோ அத்தனைக்கும்

உங்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம்பெற்று மொத்த விற்பனையில் முன்னணியில் திகழ்வது:

கௌரி அழகுமாடம்

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உள்ளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துகள்





# கௌரி அழகுமாடம்

316, காங்கேசன்துறை வீதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேசுமாறுகோரி சம்மாந்துறையில் தீர்மானம்

## பிரதேச சபை நிறைவேற்றியது

அம்பாறை, ஒக். 30

''நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும்.''

மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் ஒன்றை சம்மாந்துறை பிரதேசசபை நிறைவேற்றியுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான ஐ. எம். இப்ரகீம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமயமே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

சபையின் உறுப்பினரான ஐ. தே. க. பிரமுகர் யு. கே. நிஹால் இந்த தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றுகையில், அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனையை சகல கட்சிகளும் ஆதரித்தால் கூட சமாதானம் ஏற்படாது. விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மட்டுமே சமாதானம் ஏற்படும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கஷ்டங்கள் நீங்கி சமாதானம் ஏற்பட வேண்டும். இதற்காக சமாதான ஊர்தி நடத்துவதால் பயன் இல்லை. விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தினாலே பயன் கிடைக்கும். சர்வதேச நாடு ஒன்றின் ஊடாக புலிகளுடன் தொடர்பு கொள்ளு அரசு முன் வரவேண்டும்— என்றார்.

''நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த உதவும் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும்'' என்று சபைத் தலைவர் இப்ரகீம் தெரிவித்ததையடுத்து அது ஏகமனதாக நிறைவேறியது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சியில் இருக்கும் இந்தப் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க. மற்றும் சுயேச்சை உறுப்பினர்களும் இத் தீர்மானத்தை ஆதரித்து உரையாற்றினர்.

ராகிங்கில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒருவர் இறந்த சம்பவம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, காட்டு மிராண்டித்தனமான இந்தச் சம்பவத்தை கண்டிப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(இ-14-3)

---


உ

யா/ வண். வட கிழக்கு
கொண்டலடி விநாயகர் ஆலயம்
(இறைமூத்த நயினார் கோவில்)

# புதிய கைலாச வாகன வெள்ளோட்ட விழா

அமரர் கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை
சிற்பச் சக்கரவர்த்தி திரு. ஆ. ஜீவரத்தினம்
ஆகியோரின் மாணவன்
**திரு. நடராசா சற்குருநாதன்** (குரு)
(திர்ஷிகா கலைக்கூடம், திருநெல்வேலி)
அவர்களால் உருவாக்கப்பெற்ற

**புதிய கைலாசவாகன வெள்ளோட்ட விழா**
**ஈசுரவருடம் ஐப்பசி மாதம் 13ஆம் நாள் வியாழக்கிழமை**
**30 - 10 - 1997 காலை 9-00 மணிக்கு** (பழைய நேரம்)
நடைபெறும்.

தொடர்ந்து கலைஞனுக்கான பாராட்டு பட்டமளிப்பு விழா நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

கடவுள் வணக்கம்:-
வரவேற்புரை:- திரு. ந. நந்தகுமார் (விழாத் தலைவர்) (ஆலய பொருளாளர்)
ஆசியுரை:- (அ) சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் (ஆலய பிரதமகுரு)
(ஆ) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் (குருமகா சந்நிதானம் - நல்லை ஆதீனம்)
பட்டமளிப்பும் பாராட்டும்:- பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
வாழ்த்துப்பா பாடி கௌரவிப்பவர்:- 'மதுரகவி' காரை. எம். பி. அருளானந்தன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)
பாராட்டுரைகள்:-
i) திரு. கே. இராஜபாலன் (கிராம அலுவலர் (ஜே/101)
ii) திரு. வே. பாலசிங்கம் (ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்)
iii) திரு. ஆ. மகாலிங்கம் (பிரதேச செயலாளர், உடுவில் உபதலைவர், இந்துசமயப் பேரவை)
iV) திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
V) திரு. சி. வேன்முருகோண்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர், நல்லூர் விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை)
Vi) திரு. என். கே. பத்மநாதன் (அளவையூர், நாதஸ்வர கான கலாநிதி)
Vii) திரு. கா. தவராசா (அதிபர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)
பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்:
பதிலுரை:- திரு. ந. சற்குருநாதன் (விழா நாயகன்)
நன்றியுரை:- திரு. ச. திருச்செல்வராஜன் (ஆலய செயலாளர்)
ஒலி, ஒளி அமைப்பு:- கண்ணா சவுண்ட் சேவிஸ், திருநெல்வேலி
மங்கள இசை:- ஈழநல்லூர் ஜெயம் குழுவினர்.

**ஆலய தர்மகர்த்தா சபையும், விழா உபயகாரரும்.**

544 (222), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (50851)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஏக்கர் நிலத்தில்

# இராமநாதன் கல்லூரியில் மூலிகைப் பண்ணை அமைப்பு

வலிகாமம் தெற்கு, ஒக். 30

குடாநாட்டில் மூலிகை வளங்களைப் பேணிக் காத்து இளம் சந்ததியினருக்கு அதன் மகத்துவத்தை உணர்த்தி, மூலிகைப் பயன்பாடுகளை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் மூலிகைப்பண்ணை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பண்ணையின் உபயோகத்திற்கென இராமநாதன் கல்லூரியின் தென்கிழக்குப் பகுதியில் ஓர் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப்பிரிவின் ஏற்பாட்டிலும், உடுவில் கோட்ட கல்விப்பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையிலும் இப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் பிரமாண அடிப்படையிலான நிதி உதவித் திட்டத்தின் கீழ் இப் பண்ணையின் தேவைக்கென 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் தலைமையில் இதன் ஆரம்ப விழா அண்மையில் நடைபெற்றது. (ஐ-152)

# ஆஸ்பத்திரிஊன்றுகோல்களை திருப்பி ஒப்படைக்க கோரிக்கை

நெல்லியடி, ஒக். 30

மந்திகை மருத்துவமனையின் பௌதிகசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற பல நோயாளிகள் தம்முடன் வைத்தியசாலைக்குச் சொந்தமான ஊன்று கோல்களையும் கொண்டு சென்றுள்ளனர் எனத்தெரியவருகின்றது.

தற்பொழுது இப் பிரிவில் நோயாளிகள் அதிகரித்து வருவதனால் ஊன்றுகோல்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

எனவே நோயாளிகளின் நலன் கருதி ஏற்கனவே நோயாளிகள் தம்முடன் கொண்டு சென்ற ஊன்று கோல்களைத் திருப்பி ஒப்படைக்குமாறும், புதிய ஊன்று கோல்களை அன்பளிப்புச் செய்யவிரும்பும் நலன் விரும்பிகள் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் பௌதிகசிகிச்சைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ-109)


★ இல்லத்து அரசிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்
★ உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அரியதொரு நல்வாய்ப்பு

**கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு**
என்று கேட்டு வாங்குங்கள்,

★ தூசுக்கள் குறுணிகள் நீக்கித்துப்புரவு செய்யப்பட்டது.
★ நீரிலே இட்டவுடன் கோதுகள் எளிதில் நீங்கிவிடும்.
★ அரைத்தல் வேலையை எளிதாக்கிவிடும்.

**கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு**
யாழ்ப்பாணம் பசாரில் சகல பலசரக்கு மாளிகைக் கடைகளிலும் விற்பனையாகின்றது,

ஒரு முறை வாங்கிப் பயன்படுத்தினால் மீண்டும் மீண்டும் நாட வைக்கும்;

**கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு**
துப்புரவும், தரமும் வாய்ந்த உழுத்தம்மாவும் ஸ்ரீ கண்ணன் அரைக்கும் ஆலையிலே தயாரித்து விற்பனையாகின்றது.

இன்றே வாங்குங்கள்! பயனடையுங்கள்!

**ஸ்ரீகண்ணன் அரைக்கும் ஆலை**
பலாலி வீதி, திருநெல்வேலி.
(சந்தைக்கு அருகாமை) (50865)


## நீங்கா நினைவுகளில்

தாயின் மகிழ்விற்காய் 22-11-1969
மத்தியின் எழுச்சிக்காய் 30-10-1986

மத்தியின் மாணவ முதல்வன்

**பொன். விபுலானந்தன்**

பயம் உடுத்து குலை நடுங்கும்
பிஞ்சுகளை ஏந்தினாய்!
கணை தடுத்து; உயிர் துறந்து
கடமையையும் காட்டினாய்!
தாய் சிறந்த அன்பினோடு
துன்பமுற்றும் தாங்கினாய்!
தனியிருந்து தவமியற்றி
தைரியத்தை ஊட்டினாய்!
வாய்மை அன்பு வெல்லுகின்ற
வழி நடந்து காட்டினாய்!
வையம் என்றும் கண்டில்லாத
வலிமை எம்முள் ஊட்டினாய்!

மாணவ முதல்வர் சபை,
யாழ். மத்திய கல்லூரி.

(50866)

## மாட்டிறைச்சிக்கடை

**கைதடி, நுணாவில்**

வாடிக்கையாளர்களுக்கும் ஓடர் இறைச்சி பெறுபவர்களுக்கும், எனது தொழிலாளருக்கும் இதயம் நிறைந்த

# தீபாவளி நல் வாழ்த்துக்கள்

இன்று இறைச்சி விற்பனை நடைபெறும்.

உரிமையாளர்

மாடுகள் விற்பனைக்கிருந்தால், கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் உடன் ரொக்கப்பணம் வழங்கப்படும்.

**எஸ். எஸ். சோமு**

வைரவர் கோவிலடி,
கைதடி, நுணாவில். (50620)


## பத்தாண்டு நினைவஞ்சலி



நினைவில் நீங்காத ஓவியம்

### திருமதி மருதாம்பாள் பரமசாமி

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| புங்குடுதீவு | இணுவில் |
| 08—04—1940 | 22—10—1987 |

பத்தாண்டு பறந்தோடிப் போனதோ பார்மீது
மெத்தவுன் மேனியெழில் காணாது கவல்கின்றோம்
நித்தம் நின் நினைவலைகள் எம் நெஞ்சில்
மிதந்து வர
அத்தனடி யிணைக்கீழ் அமைதியாய் வாழுமம்மா!

நீங்கள் மறைந்து பத்தாண்டுகள் என்ன பல்லாயிரம் ஆண்டுகள் சென்றாலும் எங்கள் மனத் திரையில் நீங்காத ஒவியமாய் என்றும் வாழ்வீர்கள்.

அன்பு நெஞ்சங்கள்:

சோ, பரமசாமி [கணவன்]

பிள்ளைகள்: ப. தமயந்தி, ப. சிவானந்தி

''மருதாமனை''
இணுவில் தெற்கு,

(50831)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.30

திருநெல்வேலி வளாக வீதியிலுள்ள ''இந்து அக்கடமி,, கல்வி நிறுவன மாணவர்களால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் ''வளர்பிறை,, சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

(ஐ-1ரீ)

## ஈ. பி. டி. பி. உறுப்பினர் நெடுந்தீவு விஜயம்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் நேற்று முன்தினம் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் இருந்து நெடுந்தீவில் மேற்கொள்ளப்படும் 75 லட்சம் ரூபா செலவிலான திட்டங்களையும் இவர் பார்வையிட்டார்.

நெடுந்தீவு பிரஜைகள் குழுப் பிரமுகர்களைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளையும் அவர் கேட்டறிந்தார்.

(இ-3)


## தேவை

நல்லொழுக்கமும், அனுபவமும் உள்ள சமையற்காரர் பிள்ளைகளை பராமரிக்க படித்த அனுபவமுள்ள ஆண், பெண், ஊழியர்கள் தேவை. நேரில் உடன் தொடர்பு கொள்ளவும்.

**ஏலிம் சிறுவர் இல்லம்**

மெமோரியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(50837)



## நெசவாளர் தேவை

நெசவுத் தொழிலில் அனுபவமுள்ள ஆண், பெண் நெசவாளர்தேவை. 01.11.97 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 1.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

**ஏலிம் சிறுவர் இல்லம்,**

மெமோரியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(50836)


## 10-ம் ஆண்டு நினைவலைகள்



| பிறப்பு: | அழிப்பு: |
|---|---|
| 09 | 21 |
| 11 | 10 |
| 1952 | 1987 |

### அமரர் சோ. யோகசுந்தரம்

(முன்னாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினிபஸ் உரிமையாளரும்)

திதி: 30-10-997

தித்திக்கும் தீபாவளி- எம்மைத்
தத்தளிக்க வைத்ததுவோ!
பத்தாண்டுகளாக பாவிகள்– நாம்
பாசமுள்ள உமை நினைந்து
புத்தாடைகளையும் மறந்து
புதுப் பொலிவும் இழந்து
நித்தமும் உன் நினைவுடனே
நீங்காமல் நிலைத்து விட்டோம்.

—குடும்பத்தினர்.

''யோகா இல்லம்''
24/3, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (50850)

## நீங்காத நினைவலைகள்



### சிவரட்ணம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

| பிறப்பு: | அழிப்பு: |
|---|---|
| 31 — 08 — 1964 | 16 — 01 — 1997 |

அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து, எங்கள் இல்லத்தின் வடிவிளக்காய்த் திகழ்ந்து கடமைக்காய் உனையே மெழுகாக்கி நின்றீர்! கொடியவர்களின் கொலை வெறியால் எமை
ஆறாத்துயரில் விட்டுச் சென்ற

எம் அன்புத் தெய்வமே கண்ணா!
உன் அன்பு முகமிழந்தோம்
ஆசை மொழியிழந்தோம்
நீதி கேட்க வழியிழந்தோம்
நித்தம் உம் நினைவால்
சித்தம் கலங்குதையா!
பாசம் வைத்த நெஞ்சமெலாம்
பரிதவித்து வாடுதையா!
இத் தீபாவளித் திருநாளில்—உன்
பிஞ்சு மழலைகளும் எண்ணி உருகுகின்றனரையா!

யாபேரும் உன் பிரிவைத் தாங்க முடியாத துயரத்திலும், வற்றாத கண்ணீருடனும் என்றும் உமை நினைத்திருப்போம். நாம் இங்கே இப் புனித நாளில் உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (50822)


# தீபாவளி வாழ்த்துக்கள்

**கொடியவர் அழித்த கொடுமை களைந்து விடிவு தந்திட வதை செய்த திருநாளில்-போர்க் கொடுமைகள் நீங்கி புதுவாழ்வு கண்டிட ஒற்றுமை காத்து உறுதி கொள்வோம்.**

புதுவாழ்வுக்காக ஏங்கி நிற்கும் கல்விமான்கள், வர்த்தகர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தமிழ மக்களுக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்வதோடு உறுதியான நெஞ்சுடனும்,தூய்மையான சிந்தனையுடனும்,தெளிவான நோக்குடனும் புதிய பாதையில் காலடி எடுத்து வைத்து நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அணிதிரள வாரீர் என அழைப்பு விடுக்கின்றோம்.

**ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணி (DPLF)**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**

(சி/ 1898)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி விறாத்துக்குஞ்சு விற்பனைக்குண்டு. அரசடி ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு. [49829]

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. கிலோ 160/- அ. யோகானந்தா, இல. 1, மடத்தடி ஒழுங்கை, சங்கத்தானை. சாவகச்சேரி. [50844]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) சிறிய சேவல் விறாத்துக்குஞ்சுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [50862]

### விற்பனையாகிறது

கைக்கடக்கமான சிறிய கந்தர்சஷ்டிப் புத்தகம் விற்பனையாகின்றது. விலை ரூபா 5, நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [49828]

### கோழி விற்பனை

வடடுக்கோட்டை மாவடிச் சந்தியில் 'மாஸ்ரர்' நிலையத்தில் நல்லின முட்டையிடும் கோழி, புறோயிலர் நல்லின, ஒருமாத கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு [50857]

### பிறீமாகோழிக்குஞ்சு

ஒருமாதம நிரமபய கைலையின் சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சும், 12 நாள் நிரம்பிய கைலையின் சிவப்புக் குஞ்சும் விற்பனைக்கு உண்டு. கண்ணா வீடியோ சென்ரர், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [50815]

06-11-97 அன்று ஒருநாள் புறோயிலர் குஞ்சும், கைலையின் சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். கண்ணா வீடியோ சென்ரர், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [50814]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ளலாம். (காலை தொடக்கம் மாலை வரை) தொடர்பு: Luck Farm Sales Centre, palaly. Road, Thirunelvely Jaffna. [50830]

நியாய விலையில் புறோயிலர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். குறைந்த நிறையிலும் பெற்றுக் கொள்ளலாம் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். (50860)

### O/L MATHS 97

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10. கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (50331)

### தவறிவிட்டது

ஏழாலை வடக்கைச்சேர்ந்த கந்தசாமி விவதாசன் என்பவருடைய விசேட அடையாள அட்டை கோண்டாவிலுக்கும், தாவடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவம் ஸ்ரோர்ஸ், துரை வீதி சந்தி, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (49827)

புலோப்பளை மேற்கைச் சேர்ந்த இந்திரகுமார் மகேஸ்வரி என்பவரது $1\frac{1}{4}$ பவுண் சங்கிலியும், $\frac{1}{2}$ பவுண்காப்பும் பேப்பரில் சுற்றிவைக்கப்பட்ட நிலையில் 27-10-97 அன்று திங்கட்கிழமை பி.ப 2 . 30 மணியளவில் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், சாவகச்சேரி முருகன் ஜுவல்லறியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/1918)

### விண்ணப்பப் படிவம்

லொத்தர் மூலம் தெரிவாகும் அமெரிக்க விசாப் படிவம் கிடைக்கும். மேலதிக விவரங்களுக்கு: நாதன் ரேடேர்ஸ், 634, 636, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோயில் முன்பாக. (50848)


## எமது தீபாவளி வாழ்த்துக்கள்

வீடியோ படம் பிடித்திடவும்,
அழகிய வேலைப்பாடுகள் அமைந்த
சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும் நாடுங்கள்:

**வீடியோ கலாமினி**

**அச்சுவேலி.**

யாழ். நகரில் தொடர்புகளுக்கு:

**கல்யாணி**

பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

(50839)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

**செல்வி ஜனீரா சின்னையா**

அவர்களின் தாயாரும்

முன்னாள் யூனியன் கல்லூரி ஆசிரியையுமான

**அமரர் அன்னம்மா சின்னையா**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
அலுவலக உத்தியோகத்தர்.
**யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**
**பொன். பரமானந்தா ம. வி.**
குரும்பசிட்டி. (50849)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 23 — 08 — 1987



உதிர்வு: 30 — 09 — 1997

**முருகேசு சிவலிங்கம்**

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

எமது குடும்பத்தின்ஒளிவிளக்காய்த்திகழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாய் வாழ்ந்து கொழும்பில் இறைவனடி சேர்ந்த அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ந சிவராசா குடும்பமும்,
மாமி, மச்சான், மச்சான்மார்,
உறவினர்களும்.

குசவர் மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (சி/1857)





நாளைய நாகரிகத்தினை
இன்றே அறிமுகஞ் செய்யும்

**சிற்றியின்**

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
மாணவர்கள் அனைவருக்கும்
எமது இனிய உளங் கனிந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**

# சிற்றி ரெயிலர்ஸ்

(ரவசர் தினுசுகளின் சங்கமம்)

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள்; அந்த ஆடை பாதியை அழகுபடுத்த யாழ். நகரில் நவீன கட்டிங் அமைப்புடன் எடுப்பாக தைத்துப் பெற்றுக் கொள்ளவும், அனைத்து ரக புடைவை தினுசுகளையும் குறைந்த விலையில் நிறைந்த பயனை அடைய நீங்கள் நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்:

# CITY TAILORS

**(Specialist in wedding Coats & Suits)**

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளரை அழகுபடுத்துவதே எமது குறிக்கோள்

(சி/ 1919)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீபாவளிச் சங்கற்பம்

பண்டிகைகள், கொண்டாட்டங்களுக்கு கதைகள், காரணங்கள் வெவ்வேறு கூறப்பட்டாலும் அவற்றுக்கு உள்ளார்ந்த தத்துவங்கள் உண்டு. அந்தத் தத்துவங்கள் மக்களை நல்வழிப்படுத்தக் கூடியன. வாழ்க்கைக்கான நன்னெறிகளை அடிப்படையாகக் கொண்டவை.

மனதில் வளரக்கூடிய அரக்க குணங்களை நீக்கி, மற்றவர்களுக்கு உதவும், மற்றவர்களை மன்னிக்கும் மனப்பக்குவத்தை உருவாக்கவேண்டும் என்பதே தீபாவளியின் தத்துவம். மனதில் உள்ள இருளை அகற்றி ஒளி ஏற்றுவது என்பது தீயவைகளைந்து நல்லன கொள்ளுதலே ஆகும்.

தர்மம் தழைக்க, அறம் ஓங்க தனி மனிதன் ஒவ்வொருவனும் நற்குணம், நல்லொழுக்கம் உடையோராக வாழ்தல் அவசியம். ஆனால் சமுதாயத்தில் எல்லோரும் நல்லவர்களாக, களங்கமில்லா உள்ளத்தினராக, செயலினராக இருப்பதில்லை.

மக்களில் பெரும்பாலானோர் மனத்தூய்மை இல்லாதவர்களாகவே உள்ளனர். கஞ்சிக்குள் பயறு போட்டது போல, மிகச் சிலரே மன இருள் நீங்கி ஒளிபெற்றவர்களாக வாழ்கின்றனர்.

இந்தச் சமனற்ற நிலை அன்று — புராண காலத்தில் — மட்டும் இருந்தது என்பதல்ல. இன்றைக்கும் அதே நிலையே.

ஆகையால் மனதில் உள்ள பொறாமை, அழுக்காறு, அசுரத்தனம் முதலியவற்றை நீக்கி அன்பு, கருணை, இரக்கம், வள்ளன்மை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுமாறு மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்த வேண்டிய தேவை தொடர்கிறது.

அந்த வகையில் தீபாவளி போன்ற பண்டிகைகள் மனிதனை மனிதனாக வாழ நினைவூட்டுகின்ற நிகழ்வுகளாகவும் அமைகின்றன. ஆனால் இத்தகைய பண்டிகை நாள்களிலேயே சிலர் ஒவ்வாத நடத்தைகளில் ஈடுபடுவதும் உண்டு.

அதனால் பண்டிகைகளின் நோக்கம் அர்த்தமற்றதாகி விடுகின்றது. குளிக்கப்போய் சேறு பூசுவதை ஒத்ததுமாகும்.

சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் தனிமனிதர்களே பங்களிப்புச் செய்கின்றார்கள். ஆகையால் தனி மனிதர்கள் மாண்புடையோராக வாழ்ந்தாலே சமூகத்தில் இருள் நீங்கி ஒளி பிறக்கும்.

தமிழர்களாகிய நாம் மன நிம்மதியற்ற, அமைதியற்ற வாழ்க்கையையே நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை நீங்கி, இயல்பான அமைதி நிறைந்த மனித வாழ்க்கை நடத்துவதற்கு, எம்மில் நல்ல குணங்கள், நல்ல தன்மைகள் வளர வேண்டும்.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு இப்போது எம்மத்தியில் அனாதரவானவர்கள், உதவியற்றவர்கள், அங்கவீனர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவ்வாறு நலிவுற்றோரின் வாழ்க்கை நலம்பெற, மனம் மகிழ்வடைய உதவவேண்டும் என்ற எண்ணம் எமக்குத் தேவை. அந்த எண்ணம் செயல் உருப்பெற வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் இயன்றளவு நல்லவர்களாக, மன இருள் நீங்கியவராக வாழ்வதற்கு ஆன்ம பலம் தேவை. அத்தகைய ஆன்ம பலத்தைப் பெறுவதற்கு சமய நெறிகள் காட்டும் வழிகளில் வாழ்வதே சரியான பாதை. அந்தப் பாதையில் நடப்பதற்கு மனச்சித்தம் கொள்வோமாக. அதுவே இன்றைய தீபாவளிச் சங்கற்பமாக இருக்கட்டும்.

# பல்கலைக்கழகங்களில் "ராகிங்" முற்றாக நிறுத்தப்பட வேண்டும்

## நேற்றைய அஞ்சலிக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 30

கல்வியில் உன்னதநிலையை வகிக்கின்ற எம்மத்தியில் 'ராகிங்' தொடர்வதும் அதன் பாரிய தாக்கங்களுக்கு மாணவர்கள் பலியாவதும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் அ. பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலஞ்சென்ற பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவன் எஸ் வரப்பிரகாஷின் அஞ்சலிக் கூட்டம் நேற்று சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அ. பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பகிடிவதை (ராகிங்) உயர் கல்வி நிறுவனங்களில் தடை செய்யப்பட்டிருந்தும் —

கல்வி அமைச்சு இது குறித்து சட்டபூர்வமாக அறிவித்திருந்தும் — அது நிறுத்தப்படவில்லை.

இச்சம்பவங்களினால் பல்கலைக்கழகங்களில் பணி புரியும் பேராசிரியர்களே விலகி விடமுயன்ற நிகழ்வுகளும் உண்டு.

ஒரு சமயத்தில் கல்வியில் முன்னணி வகித்த யாழ்ப்பாணம் இன்று எட்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் ''எங்களை எவரும் கட்டுப்படுத்த முடியாது; நாம்மட்டுமே சமுதாயத்தில் மேன்மையானவர்கள்'' என்ற வகையில் நடந்து கொள்கின்றனர்.

தம்மைப் போன்று பல்கலைக்கழகத்துக்கு வருகின்ற மாணவர்கள் எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் உயர் கல்வி நிறுவனத்துக்குள் நுழைகின்றார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் — என்றார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ் தனபாலன் அஞ்சலி உரை நிகழ்த்துகையில் —

சமூகத்தில் அமைதிதேவை. அமைதியற்ற நிலையிலும் கூட ஓரளவாவது அமைதியை அனுசரித்துக் கொள்ளவேண்டும்; நாம் எவரையும் தாக்கவோ அல்லது எந்தக் கல்லூரியையும் சம்பந்தப்படுத்திக் கூறவோ இல்லை. இது போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடாது என்று கேட்பதற்காகவே நாம் இங்கு கூடியுள்ளோம்.

பல்கலைக்கழகம் செல்பவர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதை எமது காலத்தில் ஆசிரியர்கள் எமக்குக் கூறுவார்கள். இன்று அந்த நடைமுறை இல்லை. ஏறக்குறைய 90 சத வீதமானவர்கள் தமது சொந்தப் பகுதியை விட்டு வேறு இடங்களில் உள்ள பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றனர். அவர்கள் அங்கு எவ்வாறு ஒழுக வேண்டும் என்றுசொல்லிக் கொடுப்பது அவசியமாகும்.

ஒரு காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் கூட பெற்றோர்களுடனேயே வந்திருந்தனர். ராகிங் தொல்லைகள் தான் அவர்கள் பெற்றோர்களுடன் வரக் காரணமாக அமைந்தது.

கற்ற சமூகம் இவ்வாறு எல்லாம் இருக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். எமது கல்லூரி மாணவர்கள் இந்தச்சம்பவத்தால் அதிர்ச்சிக்குள்ளான போதும் மூத்தவர்களின் வழிநடத்தலில் அமைதியாகஇருந்தனர். வதந்திகளுக்கு ஆளாகாமல் மாணவர் சமுதாயம் ஒற்றுமையுடன் வாழ்வதே வரப்பிரகாஷிற்கு நாம் செய்யும் கைம்மாறு என்றார்.

வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் அஞ்சலிஉரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:

தமிழ்ச் சமூகம் பல கஷ்டங்களுக்குள்ளாகிய நிலையில் ஒற்றுமையை மறந்து வேற்றுமைப் பட்டுக் கொண்டிருப்பது வேதனைக்குரியது.

மாணவன் வரப்பிரகாஷின் மரணம் எமது சமூகத்துக்குத் தேவையான ஒன்றா?

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எமது இனத்தவர்கள் என்பதை எண்ணும்போது எமது இளந்தலைமுறை எங்கு செல்கின்றது என்பதையிட்டு தவிக்கின்றோம் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா தமது உரையில், பெற்றோருக்குப் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கனவுகள் உண்டு. தனது பிள்ளை சமூகத்தின் சிறந்த அங்கமாக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் கல்வி கற்பிக்கின்றனர். நட்பு முறையைப் பலப்படுத்த மேற்குலக நாடுகளில் 'ராகிங்' முறை வந்தது. ஆனால், அது இங்கே திசைமாறி பாரதூரமான நிகழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

எமது மாணவர்களே இந்த மாணவனைத் துன்புறுத்தியுள்ளனர் என்பது வேதனைப்பட வேண்டியது இவருடைய மரணம் மூலமாகவேனும் நாம் புது விதிசெய்யவேண்டும் — என்றார்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் க. கேசவன் தமது அஞ்சலி உரையில் —

மேலைத் தேசத்தின் போலிக் கலாசாரம் இன்று எமது வக்கிர உணர்வுகளுக்குத் தீனிபோடுகின்றது.

பகிடிவதையைத் தடுப்பதற்குப் புதிதாக சட்டம் ஏதாவது உண்டா என்று கேட்கிறார்கள். இது தொடர்பாக எமது பழைய மாணவர் சங்கம் தீர்மானம் எடுக்கவுள்ளது.

பகிடிவதையை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கொண்டு அதை நிறுத்துவதற்கு உறுதியான நடைமுறைகளைச் செயற்படுத்தவேண்டும்.

திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது போல் மாணவர்களாக இதை நிறுத்தவேண்டும் என்று முடிவெடுக்காதவரை இது போன்ற கொடுமைகள் தொடரத்தான் செய்யும் என்பதை உணர்ந்து கொள்வது மாணவர்களின் கடமை — என்றார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் பி. ரூபேந்திரன் தமது அஞ்சலியுரையில் தெரிவித்ததாவது:-

மேற்குலக நாடுகள் வளர்ச்சியடைந்து 'ராகிங்' எனப்படும் பகிடிவதைகளைக் கைவிட்ட நிலையிலும் நாம் இன்றும் அதனையே பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கின்றோம்.

உண்மையில் பகிடிவதை என்பதற்குப் பதிலாக சித்திரவதை என்ற சொல்தான் பொருத்தமாகும். எதற்குமே ஓர் எல்லையுண்டு. எல்லை மீறும்போதுதான் இது போன்ற வேதனைகளும் துயரங்களும் ஏற்படும்.

மாணவர்களாகிய நாம் பகிடிவதைகளில் ஈடுபடமாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்வதே மறைந்த சக மாணவன் வரப்பிரகாஷிற்கு நாம் செய்யும் அஞ்சலியும் — நட்பின் அடையாளமும் ஆகும் — என்றார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கத் தலைவர் இ. யுகபாலசிங்கம் தமது அஞ்சலியுரையில், மேற்குலகநாடுகளிடம் இருந்து தொழில்நுட்பத்தைத்தான் நாம் முன்னர் பெற்றுக்கொண்டோம். அவை மனித நேயத்தை — அன்பை — ஆத்மீக நெறிகளை எங்களிடமிருந்து கற்றுக்கொண்டன. வரப்பிரகாஷிற்கு இன்று நிகழ்ந்துள்ள சம்பவம்! அவற்றைக்கூட மேற்குலகநாடுகளிடமிருந்து பெற வேண்டுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

வரப்பிரகாஷ் மறைவின் மூலம் எமக்கு விட்டுச் சென்ற செய்தி என்னவெனில் இனிமேலாவது இவ்வாறு ராகிங் மூலம் மாணவர்கள் எவராவது பலியாகக் கூடாது என்பது தான். எனவே இன்றைய மாணவர்கள் — எதிர்கால பல்கலைக்கழக மாணவர்கள் — ராகிங் செய்வதில்லை என்று இன்று உறுதி பூண வேண்டும் — என்றார்.

புளொட் மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா உரையாற்றும் போது தெரிவித்ததாவது;

முழு மாணவ சமுதாயத்துக்குமே தலைகுனிவை ஏற்படுத்திய ராகிங் சம்பவம் இனிமேலும் தொடரக் கூடாது. ராகிங்கிற்குப் பலியான கடைசி மாணவனாக வரப்பிரகாஷ் இருக்கட்டும்.

தமிழ் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பல்கலைக்கழகம் செல்கிறார்கள். கல்வியைப் பொறுத்தவரை ஆசியாவில் யாழ்ப்பாணத் தமிழர்களே முன்னணியில் நின்றனர். ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் மதிக்கப்படுவதற்கு அவர்களின் கல்வியே காரணம்.

மாணவ சமுதாயம் இந்த உண்மைகளை மறந்துவிட்டு ராகிங் மூலம் துயரமான சம்பவங்கள் ஏற்படுவதற்கு இனியும் இடமளிக்கக்கூடாது.

எமது அமைப்பின் சார்பில் மறைந்த மாணவரின் குடும்பத்தினருக்கு அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் — என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்கள் உட்பட பலர் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மறைந்த மாணவன் வரப்பிரகாஷின் உருவப்படத்திற்கு மலர் மாலைகள், மலர்வளையங்கள் வைத்து மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நாளை

ஐப்பசி 11

வெள்ளிக்கிழமை

திதி: அமாவாசை

பிற்பகல் 3.44 வரை.

நட்சத்திரம்: சுவாதி

பின்இரவு 3 29 வரை.

கேதார கௌரி விரதம்

சுபநேரம்: 6.03-7.33

... 10.33-12.03

(... பழைய நேரப்படி)

### ராகிங்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதே சமயம் வரப்பிரகாஷின் தகனக்கிரியைகள் நேற்று பிற்பகல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

முன்னதாக பம்பலப்பிட்டி இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான, புனர்வாழ்வு துறைமுக அபிவிருத்திஅமைச்சர் எம் எச். எம். அஷ்ரப் உட்பட பல அரசியல்வாதிகளும் கல்விமான்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைக்கழகங்களிலிருந்துசுமார் 1500மாணவர்கள் நேற்று இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டனர்.

பூதவுடல் தாங்கிய பேழையை குடும்ப உறுப்பினர்கள், மாணவர்கள் சுமந்து சென்று பிரேதவாகனத்தில் வைத்தனர்.

இறுதிச் சடங்கில் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனாவும் கலந்து கொண்டார்.

(இ-5-21-3)

### மரண...

(முதலாம் பக்கத் தொடர்)

ளப்படுவதாக பொலிஸ்தரப்பு தெரிவிக்கிறது.

இம்மரணம் தொடர்பான 7 சந்தேக நபர்களின் வாக்குமூலங்களும் இது வரை பெறப்பட்டுள்ளன. மேலும் 6 மாணவர்களின் வாக்கு மூலங்கள் பெறப்படவுள்ளன.

சந்தேக நபர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டுசுமத்தப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. (இ- 21)

### ஆசிரியர்..

(முதலாம் பக்கத் தொடர்)

திலுள்ள 208 பாடசாலைகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. அதிபர்கள் மட்டும் சமூகமளித்திருந்தார்கள்.

நவம்பர் மாதச் சம்பளத்துடன் 7 மாத அலவன்ஸ் வழங்கப்படும் என்றும் —

மிகுதி அடுத்தஆண்டுமார்ச் மாதத்துக்கு முன்பு வழங்கப்படும் என்றும் மாகாணக் கல்வியமைச்சு அறிவித்துள்ள போதிலும் 14 மாதகால அலவன்ஸும் ஒரே தடவையில் வழங்கப்பட வேண்டும் என ஆசிரிய தொழிற் சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

(இ-21-14)

### கோடடையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கவே இத்தீவிபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இழப்புகளின் பெறுமதி ரூபா 12 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-21)

### கைதான...

(முதலாம் பக்கத் தொடர்)

குகள் மூலம் ராகிங்கினால்ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் பற்றி ராகிங்குக்கு எதிராக மாணவர்களின் அபிப்பிராயத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் லெஸ்லி குணவர்த்தனா தெரிவித்தார்.

வருடா வருடம் 'வரப்பிரகாஷ்' வாரம் அனுஷ்டிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்க

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

29-10-1997 ஆம் திகதி நடைபெற்ற சீட்டிழுப்பில் பரிசுபெற்ற இலக்கங்களின் விபரம் வருமாறு:-

**1 ஆம் பரிசு - 1349**
**2 ஆம் பரிசு - 1905**
**3 ஆம் பரிசு - 1300**

ஆறுதல் பரிசில்கள்:- 1977, 1020, 0781, 1845, 1096.

பரிசு பெற்றவர்கள் ஒரு மாத காலத்திற்குள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்துப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்,
நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம்,

(50870)


# காணாமற்போனோர் விசாரணை

## இரண்டு தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 30

காணாமற் போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் உள்ள 512பிரிக்கேட்டில் நடைபெறவிருக்கின்றன.

கீழ்க் காண்போரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தமது பிரிவு கிராம சேவையாளர் சகிதம் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

- ★ கந்தையாசந்திரசேகரன் -காளுவான், சுழிபுரம்.
- ★ ஜீவனையா மதியழகன்- தொல்புரம் மேற்கு.
- ★ முருகையா ரணேஸ் குமார் - 70/1 பத்திர காளி கோயிலடி, யாழ்ப்பாணம்.
- ★ குணரத்தினம் பிரேம் குமார் -14, சீனிவாசகம் வீதி, கொட்டடி.
- ★ சின்னத்தம்பி சிவராஜா, - சில்லாலை மேற்கு
- ★ மகேந்திரன் சுரேந்திரன் -கொக்குவில் கிழக்கு.
- ★ நடேசு கிருஷ்ணமூர்த்தி -அராலி வடக்கு
- ★ கிருஷ்ணமூர்த்தி கௌரீஸ்யாலசிறி- அராலி வடக்கு.
- ★ பரமேஸ்வரி குமுதினி- சங்கரத்தை.
- ★ பரமேஸ்வரன் பரணி தரன் -சங்கரத்தை
- ★ செல்வன் தெய்வேந்திரன் -தொல்புரம்மேற்கு
- ★ கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் - இணுவில் கிழக்கு.

(இ-3)

**80 பிச்சைக்.....**

(முதலாம் பக்கத் தொடர்)

தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இச் சுற்றி வளைப்பு இடம்பெற்றதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)


எமது வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

**சாரங்கா நகைமாடம்**

177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1882)

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
**தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

தரம் - நிரந்தரம், சுவை - தித்திக்கும் தேன்சுவை இவைதான்
லிங்கன் கிறீம் ஹவுஸில் அலைமோதும் ஐஸ்கிறீம் பிரியர்கள் கூட்டம்
இன்றைய தீபாவளி நன்னாளில் ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ்ஜெலி, சொக்லட் கிறீம் மற்றும் குளிர்பான சிற்றுண்டி வகைகளை சுவைத்து மகிழ்ந்திட அழைக்கிறார்கள்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(சி/1881)

வாடிக்கையாளர்களின் நலன்கருதி மீண்டும் யாழ்.நகரில்!
**சோபனா ஆடையகம் ஆரம்பமாகியுள்ளது.**

சேட்டிங், சூட்டிங், பேபிசூட்டிங் மற்றும் சாறி வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட இன்னும் எத்தனைவகை! ஆடைகள்

**சோபனா ஆடையகம்**

16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கைப் பெருமக்கள் அனைவருக்கும்
**இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் வினோ நகைப் பூங்காவின் தரத்தினில் குறைவதுண்டோ?
அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் யாழ். நகரில் பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றார்கள்

**வினோ நகைப் பூங்கா**

185, கஸ்தூரியார் வீதி,, யாழ்ப்பாணம்.

(சி/1880)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய
**தீபாவளி வாழ்த்துக்கள்!**

**ஜெசிபா ஏஜென்சி**

**JEISHEBA AGENCY**

யாழ். நகரில் கட்டடப் பொருள்கள் அனைத்தும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

132, Stanley Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணி மனையில் 30-10-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.